

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜூலை 05, 2012 | புரட்சி 11 | முழக்கம் 25 | விலை: ரூ.2.50

## பல்லாயிரம் மக்களை சந்தித்து மனுதர்மக் கொடுமைகள் விளக்கம்

# சாதி தீண்டாமை ஒழிப்புப் பயணத்தின் எழுச்சி








*சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் நடத்திய சாதி தீண்டாமை எதிர்ப்பு; மனு சாஸ்திர எரிப்பு விளக்க 10 நாள் பரப்புரைப் பயணத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்களை சந்தித்து, ‘மனுதர்மம்’ இப்போதும் சமுதாயத்தில் நிலவி வரும் கொடுமைகளை தோழர்கள் விளக்கினர். கடந்த வாரம் முதல் மூன்று நாள் பயணம் குறித்த செய்திகள் வெளி வந்துள்ளன. அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகளின் தொகுப்பு:*

26.6.2012 அன்று காலை 9 மணியளவில் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் பரப்புரைப் பயணம் தொடங்கியது. காலை 10.30 மணியளவில் சேத்துப்பட்டு நான்கு முனை ரோட்டிலும், காலை 11.15 மணியளவில் தேவிகாபுரத்திலும், மதியம் 12.30 மணியளவில் போளூர் பேருந்து நிறுத்தத்திலும் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்குப் பிறகு பிற்பகல் 3.30 மணியளவில் நாயுடு மங்களம், மாலை 4.45 மணி வேங்கிக்கால், மாலை 5.30 மணியளவில் திருவண்ணாமலை பேருந்து நிலையம், மாலை 6 மணியளவில் திருவண்ணாமலை பெரியார் சிலை அருகிலும், இரவு 8 மணியளவில் காமராசர் சிலையருகிலும் பரப்புரை நடைபெற்றது.

27.6.2012 காலை 10 மணியளவில் புதுப்பாளையம் அம்பேத்கர் சிலையருகில் துவங்கிய பயணம் காலை 11.30 மணியளவில் செங்கம் அம்பேத்கர் சிலையருகில் பரப்புரை நடத்தியது. பரப்புரை குழுவினரை செங்கம் ஒன்றிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செயலாளர் ஆனந்த் வரவேற்றுப் பேசினார். பிற்பகல் 12.30 மணியளவில் சாத்தனூர் அணை பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்றது. மதிய உணவுக்குப் பிறகு, கழக ஆதரவாளர் முரளி முயற்சியால் சாத்தனூர் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் ஒப்புதலோடு சிற்பி ராசனின் ‘மந்திரமல்ல தந்திரமே’ நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான மாணவர்களின் கேள்விக்கு சிற்பிராசன் பதில் அளித்தார். மாலை 4.30 மணியளவில் தண்டராம்பட்டு பேருந்து நிறுத்தத்திலும் மாலை 6 மணியளவில் தானிப்பாடி பேருந்து நிறுத்தத்திலும் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவு முரளி ஏற்பாடு செய்தார். இரவு உணவும், தோழர்கள் தங்குவதற்கான ஏற்பாடும் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வெற்றிமுரசு தோழர் சக்கரவர்த்தி ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

28.6.2012 அன்று காலை 10 மணியளவில் மூங்கில் துறைப்பட்டு சர்க்கரை ஆலையருகில் துவங்கிய பரப்புரை காலை 11.30 மணி வடசிறுவள்ளூர், பிற்பகல் 12.30 வடபொன்பரப்பி, பிற்பகல் 1 மணி புதுப்பட்டில் நடைபெற்றது. மதிய உணவுக்குப் பிறகு மாலை 4 மணி எஸ்.வி. பாளையத்தில் பரப்புரை நடைபெற்றது. பெரியார் பற்றாளர் கண்ணாயிரம் தோழர்களுக்கு தேநீர் அளித்தார். மாலை 5 மணியளவில் பாண்டலம் பேருந்து நிறுத்தத்தில் பரப்புரை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் பயணத்தை விளக்கி பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சி.ஆசைத் தம்பி, சி.சாமிதுரை ஆகியோர் முன்னிலை வகிக்க, க.இராமர் வரவேற்புரையாற்றினார். செ.பிரபு கூட்டத்திற்கு தலைமையேற்றார்.

கழகப் பேச்சாளர் கா.சு. நாகராசன், வழக்கறிஞர் ப. கண்ணன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினார். வெற்றிவேல் நன்றி கூறினார். மாவட்ட பொறுப்பாளர்கள் ச. பெரியார் வெங்கட், திருமண் ஆசைத்தம்பி உள்பட ஏராளமான தோழர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

29.6.2012 அன்று கரடிசித்தூரில் காலை 10 மணியளவிலும், பிற்பகல் 12.30 மணிக்கு கக்கரடுப் பாளையம் பேருந்து நிலையத்திலும், பிற்பகல் 1.30-க்கு சின்ன சேலம் பேருந்து நிலையத்திலும் பிரச்சாரம் நடைபெற்றது. மதிய உணவு சி.ஆசைத்தம்பி ஏற்பாடு செய்தார். அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலையருகிலும், மாலை 7 மணியளவில் மூரார்பாளையத்திலும் பரப்புரை நடைபெற்றது. இதில் பொள்ளாச்சி கா.சு.நாகராசன் பங்கேற்று உரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் மும்பை மா.கதிரவன் பங்கேற்றார்.

30.6.2012 அன்று காலை 10 மணியளவில் பகண்டை கூட்ரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பும், காலை 11.30 மணியளவில் திருக்கோவிலூர் பேருந்து நிலையத்திலும், 1.45-க்கு முகையூரிலும் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்குப் பிறகு மாலை 4.30க்கு கண்டாச்சிபுரம் பேருந்து நிலையத்திலும், மாலை 6 மணியளவில் ஆலம்பூண்டி பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 7 மணியளவில் செஞ்சி பேருந்து நிலையத்திலும் பரப்புரை நடைபெற்றது. வழக்கறிஞர் லூசியா பழங்குடி மக்கள் முன்னணியைச் சார்ந்த சுடர் ஒளி சுந்தரம், தமிழ்நாடு புதிரை வண்ணார் நலவாரியம் அமைப்பைச் சார்ந்த இ.ஜீ. அருள்வளன், தி.மு.க.வை சார்ந்த திருநாவுக்கரசு உள்பட பலரும் குழுவினரை வரவேற்றனர். செஞ்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வழக்கறிஞர் லூசியா கருத்துரை வழங்கினார். செக்கடிக்குப்பம் காத்தவராயன் பகுத்தறிவு பாடல் பாடினார். மூன்று நாள் நிகழ்வில் விழுப்புரம் மாவட்ட கழகத் தோழர்கள் சி.சாமிதுரை, சா.க. இளையராஜா, கல்லை சங்கர், சு.தினகரன், நாகராஜ், லோ.மோகன், வீரமணி வீ.தினேஷ், மா. தலித்குமார், செ. பிரபு, க.இராமர், சி.ஊமைதுரை ஆகியோர் பங்கேற்றனர். மூன்று நாள் நடைபெற்ற

(4 ஆம் பக்கம்)





# சைவ மடங்களையும் ஆட்டிப் படைக்கும் மனுதர்மம்

மதுரை ஆதினம், நித்யானந்தாவை தனது வாரிசாக அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் கடும் சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்து மத கட்சிகளே நித்யானந்தா நியமனத்துக்கு எதிராக தொடர்ந்து போராட்டங்களையும், தாக்குதல்களையும் நடத்தி வருகின்றன. கருநாடக பா.ஜ.க. ஆட்சி நித்யானந்தாவை கைது செய்து நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ்நாட்டின் சைவ மடங்கள் 7 மற்றும் 9 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டன. புத்த மதம், சமண மதம் வேகமாகப் பரவியதால் உருவான நெருக்கடிகளை எதிர்கொள்ளவே இந்த மடங்கள் உருவாயின. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சைவத் ‘திருமேனிகள்’ ஊர் தோறும் கோயில் கோயிலாகச் சென்று பதிகம் பாடினர்.

சைவத்திலும் மனுதர்மமான பார்ப்பனியம் புகுந்து சைவக் கடவுள்களை பார்ப்பனமாக்கியது. சைவக் கடவுளான சிவன், பார்ப்பன ஊடுருவலால் ‘உருத்திரன்’ ஆனான். பார்ப்பன யாகங்களை நடத்தி, ‘உருத்திரனை’ப் போற்றி ‘மகாதேவன்’ என்று மாற்றினார்கள். தமிழ்க் கடவுள் என்று கூறப்பட்ட முருகன், பார்ப்பன ‘மனுதர்ம’ ஊடுருவலால் கந்தனாகவும், சுப்ரமணியனாகவும் மாற்றப்பட்டான். வீரத்தின் கடவுளாக கருதப்பட்ட கொற்றவை, ‘மனுதர்ம பார்ப்பன’ ஊடுருவலால் ‘துர்க்கை’ ஆனாள். சைவக் கடவுள் சிவனுக்கு குடும்பத்தை உருவாக்கி, பார்வதி, கணேசன், சுப்ரமணியன் (முருகன்) போன்ற உறவுகளை உருவாக்கினர். பார்ப்பன மயமாக்கினர். சைவத்தில் பார்ப்பனியம் நுழைந்தவுடன் மயோச்சுரர், கபாலிகர் என்ற இதற்கு எதிரான பிரிவுகள் வந்தன. இவர்கள் சைவ வழிபாட்டு முறைகளுக்கு நேர்மாறான வழிபாட்டைப் பின்பற்றினர். நரபலி, இறந்தோரின் இறைச்சியைப் பலியிடுதல் என்ற வழிபாட்டு முறைகளைப் பின்பற்றினர். கபாலிகர் என்ற பிரிவினர் சக்தி வழிபாடுகளை மேற்கொண்டனர். சாதி வேறுபாடுகளை மறுத்தனர். ஏனைய ஆரிய வழிபட்ட சைவர்கள் சாதி பாகுபாடுகளைப் போற்றி தாழ்த்தப்பட்ட மக்களை அடிமைகளாக நடத்தினர்.

இப்போதும் சைவ மடங்களில் ‘தம்பிரான்களாக’ சைவத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவர்கள் தான் வர முடியும். மதுரை ஆதினத்துக்கு ‘சைவப் பிள்ளை’ சாதிக்கு பதிலாக, ‘சைவ முதலியார்’ சாதியைச் சேர்ந்த நித்தியானந்தாவை எப்படி வாரிசாக்கலாம் என்ற அடிப்படையிலேயே ஏனைய சைவ மடங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதே இந்த மடங்களின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த மடங்களின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் சமஸ்கிருதம்தான் வழிபாட்டு மொழி.

1929 பிப்ரவரியில் செங்கல்பட்டில் பெரியார் நடத்திய வரலாற்றுப் புகழ் மிக்க முதலாவது சுயமரியாதை மாநாடு, தீண்டாமை, சாதி ஒழிப்பு, பார்ப்பன புரோகிதரை விலக்குதல், பெண்ணுரிமை முதலானவை பற்றிய தீர்மானங்களோடு, சாதிப் பட்டங்களை துறக்க வேண்டும். சமயச் சின்னங்களை அணியக்கூடாது என்று தீர்மானித்தது. ‘மந்திர மாவது நீறு’ என்று திருநீற்றுப் பதிகம் பாடிய சைவர்கள் கூட்டத்துக்கு இவை பேரிடியாய் விழுந்தன.

அவசர அவசரமாக சைவர்கள், அடுத்த மாதமே 1929 மார்ச் 20, 30, 31 தேதிகளில் தனிக் கூட்டத்தைக் கூட்டி, சைவர்களை மட்டுமே அழைத்து விவாதித்தனர். சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகக் கட்டிடத்தில் ஆலோசனைக் கூட்டமும், கணபதி விலாச நாடக சாலையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. சுயமரியாதை இயக்கம் தந்த நெருக்கடியால், கோயிலில் வழிபடும் மக்களுக்குள் உயர்வு தாழ்வு காட்டக் கூடாது என்றும், கோயிலுக்குள் நிலவிய ‘தேவதாசி’ முறையை (பொட்டுக் கட்டுதல்) ஒழிக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், ‘தூய்மை’யை கடைப்பிடிப்போருக்கு மட்டுமே கோயிலில் நுழைய அனுமதிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, ‘தீண்டாமை’யை மறைமுகமாக திணித்தார்கள். ஆனால், சைவர்களின் வார இதழான ‘சிவநேசன்’, “தீண்டாமை என்பது சிவபெருமானால் வகுக்கப்பட்டது” என்றும், கோயிலை நிறுவிய பெரியோர்களின் கருத்துக்கு மாறாக எல்லா வகுப்பினைரையும் கோயிலுக்குள் அனுமதிக்கக் கூடாது என்றும் வெளிப்படையாக எழுதியது. (‘சிவநேசன்’ 1929, மே)

வடமொழி சமஸ்கிருதத்தையும், பார்ப்பனர்களையும் எதிர்த்து, தனித் தமிழ் இயக்கத்தை நடத்திய மறைமலை அடிகளே தனது மகள் திருமணத்தை பார்ப்பனரை வைத்து ‘புரோகித’ முறையில்தான் நடத்தினார். எனவே பார்ப்பனரல்லாத மடம் என்பதற்காக சைவத்தின் பார்ப்பனியத்தை ஏற்க முடியாது. (மறைந்த குன்றக்குடி அடிகளார் மட்டுமே பார்ப்பன எதிர்ப்புப் பார்வையுடன் பெரியாருடன் தோழமை பாராட்டினார்)

தமிழ்நாட்டில் சிறியதும் பெரியதுமாக 18 சைவ மடங்கள் இருந்தும், 5 மடங்கள் மட்டுமே வசதி படைத்தவை.

1) மதுரை ஆதீனம் 1500 ஆண்டுகள் பழமையானது. இதன் கட்டுப்பாட்டில் 5 கோயில்களும், 1200 ஏக்கர் நிலமும், மதுரையில் பல வணிக வளாகங்களும் உள்ளன. - தலைவர் அருணகிரிநாத தேசிகர்.

2) மயிலாடுதுறை அருகே உள்ள தருமபுரம் ஆதினம் - 7 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இதன் கட்டுப்பாட்டில் 27 கோயில்களும், 16000 ஏக்கர் நிலங்களும், கல்வி நிறுவனங்களும், வணிக வளாகங்களும் உள்ளன. தலைவர்: சண்முக தேசிகன்.

3) குடந்தை அருகே உள்ள திருப்பனந்தாள் ஆதினம் - 17 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இதன் கட்டுப்பாட்டில் கோயில் ஏதும் இல்லை. 7 கிராமங்களில் 2000 ஏக்கர் நிலமும், பள்ளிகள், 2 கல்லூரிகள், வணிக வளாகங்கள் உள்ளன. தலைவர் : முத்துக்குமாரசாமி தம்பிரான்.

4) திருவாவடுதுறை ஆதினம் - நாகை மாவட்டம் குடந்தை அருகே உள்ளது. 15 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இதன் கட்டுப்பாட்டில் 28 கோயில்களும், 20000 ஏக்கர் நிலங்களும் பள்ளிக் கூடங்களும் உள்ளன. தலைவர்: சிவப்பிரகாச தேசிகர்.

5) குன்றக்குடி ஆதினம் - சிவகங்கை மாவட்டத்திலுள்ளது. 15 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இதன் கட்டுப்பாட்டில் 5 கோயில்களும், 1000 ஏக்கர் நிலமும், கட்டிடங்களும் உள்ன. தலைவர்: பொன்னம்பல அடிகளார்.

குன்றக்குடி மடங்கள் போன்ற விதிவிலக்குகள் இருந்தாலும், சைவம், பார்ப்பனியமாகி விட்டது என்பதே உண்மை. மனுதர்மத்தின் ‘சூத்திர’த் தீண்டாமையையே இப்போதும் பின்பற்றிக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் கொலைக் குற்றங்களுக்கு உள்ளாகி நிற்கும் பார்ப்பன மடமான காஞ்சி மடத்தைத்தான் இன்னமும் ‘புனித’ மடமாக உயர்த்திப் பிடிப்பதோடு, சில காலம் ஒதுங்கி நின்ற கொலைக் குற்றவாளி ஜெயேந்திரன், இப்போது வெளிப்படையாக மீண்டும் ‘ஆசி’ வழங்கத் தொடங்கி விட்டார். ✦

# அரசுப் பள்ளிகளில்கூட

திருவண்ணாமலை அருகே உள்ளது ஆடையூர் கிராமம். இந்த கிராமத்தில் தலித் மக்கள் வாழும் பகுதியில் ஆதி திராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளியும், கிராமத்துக்குள்ளேயே சாதி இந்துக்கள் வாழும் பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியும் உள்ளது. ஆதி திராவிடர் நலத் துறை பள்ளியில் 184 தலித் மாணவர்களும், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஏனைய சாதியைச் சார்ந்த 136 பேரும் படிக்கிறார்கள். இரண்டுமே அரசு நிர்வாகத்தின் கீழ் வரும் பள்ளிகள்தான். எந்த சாதியைச் சார்ந்த மாணவர்களும் எந்தப் பள்ளியிலும் படிக்க உரிமை உண்டு. ஆனால், கிராமத்தில் சாதி இந்துக்கள் வாழும் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளியில் 6 ஆம் வகுப்பில் சதீஷ் என்ற தலித் மாணவரும், ஒன்றாம் வகுப்பில் முத்துராஜ் என்ற தலித் மாணவரும் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆதி திராவிடர் பள்ளி தனியே இருக்கும்போது இந்தப் பள்ளியில் தலித் மாணவர்களை எப்படி சேர்க்கலாம் என்று சாதி வெறி கொண்ட பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்து, தங்கள் வீட்டு பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாது புறக்கணித்துள்ளனர். அவசரம் அவசரமாக அதிகாரிகள் இவர்களை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். இப்படி தலித் மாணவர் சேர்க்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் ஒருவர் விஜயகாந்த் கட்சியான தே.மு.தி.க. வின் பொறுப்பாளரான எம்.சீனிவாசன் என்பவர், “50 ஆண்டுகளாக ஒரு தலித் கூட இந்தப் பள்ளியில் சேர்க்கப்படவில்லை. இப்போது மட்டும் சேர்க்கலாமா?” என்று அதிகாரிகளுடன் அவர் வாதம் செய்துள்ளார். உடனே வருவாய்த்துறை அதிகாரி, அதற்கு பதிலடி தந்துள்ளார்.” 300 ஆண்டுகாலம் பிரிட்டிஷ்காரன்தானே நம்மை ஆட்சி செய்தான். நாம் அவனிடமிருந்து எப்படி சுதந்திரம் கேட்கலாம்?” – எனறு திருப்பிக் கேட்டுள்ளார்.

இப்படி தீண்டாமையை பின்பற்றுவோர் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்காமல், அதிகாரிகள் சமரசம் பேச வருவது என்ன நியாயம்? தீவிரமான சட்ட நடவடிக்கைகளை இத்தகையவர்கள் மீது எடுத்தால் தானே அவர்களின் சாதி வெறியை கட்டுக்குள் கொண்டு வர இயலும்?

கட்டாயக் கல்விச் சட்டம், தீண்டாமை ஒழிப்புக்கான வன்கொடுமை தடுப்புச் சட்டங்கள் இருந்தும்கூட, “பிராமணன்–சத்திரிய–வைசியன்–மட்டுமே இரு பிறப்பாளர்கள். ‘சூத்திரன்’ இழிவானவன் என்ற மனுதர்மம்தான் மக்களின் சிந்தனையில் சட்டமாக புதைந்து கிடக்கிறது. இந்த மனுதர்ம சிந்தனையை புதை குழிக்கு அனுப்பாமல், எப்படி சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும்? ஒன்றாம் வகுப்பில்கூட ஒரு தலித் மாணவனோடு பிற சாதி மாணவன் ஒன்றாக படிக்க முடியாது என்று போராடக் கிளம்புகிறது ஒரு கூட்டம் என்றால், இங்கு நடப்பது சுதந்திர ஆட்சியா? மனுதர்ம ஆட்சியா?

# ஜெய ஜெய சங்கர! ஹர ஹர சங்கர!!

## சிற்பி இராசன்

18.5.2012 அன்று ‘சன்’ தொலைக்காட்சியில் ஒரு செய்தி – நித்தியானந்தாவை மதுரை ஆதீன இளைய மடாதிபதியாக நியமித்திருப்பது பற்றி சங்கரமட ஜெயேந்திரரிடம் கருத்து கேட்கப்பட்டது.

அதற்கு அவர், “மதுரை ஆதீனம் திருஞானசம்பந்தரால் துவக்கப்பட்டது. அது சைவ மடம். அங்கு மடாதிபதிகள் மொட்டையடித்து தலையில் ருத்ராட்சம் அணிய வேண்டும். அதுவே நியதி. ஆனால், நித்தியானந்தா தலையில் முடி வைத்துக் கொண்டு, ரஞ்சிதாவுடன் சுற்றி வருகிறார். எனவே இது முறையற்ற செயல். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்” என்று கூறி முடித்துவிட்டார்.

இந்தச் செய்தியை மதுரை ஆதீன மடாதிபதி அருணகிரிநாதரிடம் எடுத்துச் சொல்லி கருத்து கேட்டபோது, அருணகிரிநாதர், “கடந்த 1987 ஆம் ஆண்டு இந்த ஜெயேந்திரர் பெண்களுடன் ஓடிப் போன சமயத்தில், செத்துப் போன காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரர், என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, இந்த ஆளை இழுத்து வரும்படி கூறினார். நானும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்த ஜெயேந்திரனை திரும்ப மடத்துக்குள் கொண்டு வந்தது – இவருக்கு மறந்திருக்காது என்று நினைக்கிறேன்” என்று கூறி முடித்தார்.

1987 ஆம் ஆண்டு 7 ஆந்திர பெண்களுடன் குடகுக்கு ஓடிப் போன ஆள், நித்தியானந்தாவையும் ரஞ்சிதாவையும் சேர்த்துப் பேசுவது ஏன் தெரியுமா? இந்த மக்கள் எதையுமே நினைவில் வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதால்தான். அதுமட்டுமல்ல, எழுத்தாளர் அனுராதா ரமணன், சீரங்கம் உஷா, கவர்ச்சி நடிகை சொர்ணமால்யாவுடன் இந்த ஓடிப் போன ஜகத்குரு என்ன செய்து கொண்டிருந்தார். ராமலீலையா? மேலும் இந்த ஆள் ஜெயேந்திரன் சொன்னார், “வேதத்தில் எல்லாமே இருக்கிறது” என்று.

சங்கர்ராமனை ஆள் வைத்துக் கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ள இவர், எந்த வேதத்தில் கொலை செய்வது எப்படி என்று படித்தார் என்பதை சொல்ல முடியுமா? காண்ட்ராக்டர் ரவி கொடுத்த வாக்குமூலங்கள் பத்திரிகைகளில் வந்தது இன்னும் பலரிடம் உள்ளது. ரவியின் தங்கையை ஜெகத்குரு பாலியல் உறவு கொள்ளும்போது ரவியையும் இருந்து பார்க்குமாறு கட்டளையிட்டாராம். இது ரவி தந்த வாக்குமூலத்தில் இருக்கிறது. சங்கரமட ஊழல் அன்று முதல் இன்றுவரை கொடிகட்டிப் பறக்கிறது.

இவர் சொல்கிறார் நித்தியானந்தா–ரஞ்சிதா விவாகரம் பற்றி... “நித்தி தலைமுடியை எடுக்கவில்லையே” – என்று “தண்டத்தை” தூக்கி எறிந்துவிட்டு பெண்களுடன் உல்லாசப் பயணம் ஓடிய ஜெயேந்திரன் பொருமுகிறார். நல்ல வேடிக்கை!

ஜெய ஜெய சங்கர! ஹர ஹர சங்கர!!

### வழக்கறிஞர் துரைசாமி வரலாற்று ஆதாரங்களுடன் விளக்கம்:

# தமிழனை தலைநிமிரச் செய்த திராவிடர் இயக்கம்

*திராவிடர் இயக்கம் வந்த பிறகு தான் தமிழன் தலைநிமிர்ந்தான்; தன்மானம் பெற்றான் என்று வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, வரலாறுகளை சுட்டிக்காட்டி உரையாற்றினார். 24.3.2012 அன்று பெரம்பூர் ராஜலட்சுமி அரங்கில் 'குடிஅரசு' வாசகர் வட்ட தொடக்க விழாவில் அவர் ஆற்றிய உரை:*

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி தன்னுடைய இந்திய வரலாற்று நூலில் சொல்லுகிறார்: 4000 ஆண்டுகளுக்கு முன்பாக வெள்ளை நிறமுள்ள ஆரியர்கள் சிந்து சமவெளி பள்ளத்தாக்கில் நுழைந்து, காஷ்மீர் முதல் ராஜபுத்னா வரை ஆக்ரமித்துக் கொண்டனர். கருப்பு நிற திராவிடர்கள்தான் இந்த நாட்டின் உண்மையான வம்சா வழியினர். ஆரிய திராவிட கலப்பில் ஏற்பட்டது வங்காளி மற்றும் ஒரியா இனம். மங்கோலியர் திராவிடர் இனக் கலப்பில் ஏற்பட்டது. பூட்டான், சிக்கிம் மற்றும் நேப்பாள் இனம் ஆரியர் மொழியான சமஸ்கிருதம் மேற்கத்திய மொழிகளோடு ஒத்துப் போவதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட இனத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் சிந்துவெளி கலாச்சாரத்திற்கு முற்பட்டவர்கள். திராவிட இனத்தைப் பற்றிய முழு ஆய்வு தனியாக மேற்கொள்ள வேண்டும். சங்ககால இலக்கியங்கள் மட்டுமே தற்போது ஆய்வுக்கு கிடைத்துள்ளது என்று கூறிவிட்டு 'ரிக்' வேதம் தான் முதலில் தோன்றியது. வேதங்களின்படி இரண்டு இனங்கள் காணப்படு கின்றன. அதாவது பிராமணர் மற்றும் சூத்திரர் என்று கூறிவிட்டு பிராமணர்கள் மற்றவர்களை ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர் என்று கூறுகிறார். இந்த ஆதிக்கம்தான் வழிவழியாக திராவிடர் இயக்கம் தோன்றும் வரை நீடித்தது. திராவிட இன மக்கள் மத நம்பிக்கையில் கட்டுண்டு கிடந்ததால் இதனை தட்டிக் கேட்க ராசாதி ராசாக்களுக்குக்கூட துணிவு இல்லை. அடிமைத்தனம் தொன்று தொட்டு தொடர்ந்து வந்தது. திராவிடர் இயக்கம் தோன்றாவிட்டால் அதே நிலைதான் இன்றைக்கும் தொடர்ந்து இருக்கும்.

கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து 1858 ஆம் ஆண்டு ஆங்கிலேயே அரசு இந்திய அரசை தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டது. அதுவரை ஆட்சியாளர்களுக்கு துதிபாடிக் கொண்டிருந்தவர்கள் பாதை மாறி ஆங்கிலேய அரசுக்கு அடிவருடிகளாக மாறினர். அதன் பலன் அதிகார பலம் பார்ப்பனர் கையில் கிடைத்தது. அன்றைய சமூக நிலைக்கு சில உதாரணம் 1. நாடார் இனப் பெண்கள் நகை அணியக் கூடாது. 2. ரவிக்கை அணியக் கூடாது. 3. தண்ணீர் குடத்தை இடுப்பில் வைத்து நடக்கக் கூடாது. 1814 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் அரசு உத்தரவுப்படி கீழ்சாதிக்காரர்களுக்கு அரசு வேலைக்கு சம்பளம் கிடையாது. உணவு மட்டும் வழங்கப்படும். நாடார் இன மக்கள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் நுழையக் கூடாது என நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியது. நடைபாதைக் கோவில்கள் தவிர பாடற்பெற்ற திருக்கோயில்களில் பர்ப்பனர் தவிர மற்றவர்கள் பூசை செய்ய அனுமதி இல்லை. விதிவிலக்காக இருந்த பழனிக் கோவிலுள்ளும் திருமலைநாயக்கன் உத்திரவால் தமிழன் வெளியேற்றப்பட்டான்.

பஞ்சமர்களுக்கு பஸ்சில் இடம் கிடையாது. நாடகக் கொட்டகையில்கூட பஞ்சமர் அனுமதி கிடையாது. திராவிடர் சங்கம் 10.11.1912 இல் தொடங்கப்பட்டது. தென்னிந்தியர் நல உரிமை சங்கம் 20.11.1916 இல் தொடங்கப்பட்டது. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்:

தமிழ்ப் பார்ப்பனர் 17.88 சதவிகிதம். தெலுங்கு பார்ப்பனர் 10.84 சதவிகிதம். இந்தியக் கிருஸ்துவர் 2.72 சதவிகிதம். நாயர் 1.54 சதவிகிதம், பலிஜா நாயுடு 0.98 சதவிகிதம், வேளாளர் 0.19 சதவிகிதம், செட்டியார் 0.15 சதவிகிதம், கவரா நாயுடு 0.06 சதவிகிதம், நாடார் 0.05 சதவிகிதம், ரெட்டி 0.04 சதவிகிதம், கம்மா 0.03 சதவிகிதம்.

காங்கிரஸ் கட்சி 1885 ஆம் ஆண்டு தொடங்கியது. அந்த ஆண்டில் சாதிவாரியாக அரசு வேலைகளில் இருந்தோர். மக்கள் தொகையில் 3.6 சதவிகிதமாக இருந்த பார்ப்பனர்கள் 42.2 சதவிகிதம், 87.9 சதவிகிதமாக இருந்த பார்ப்பனர் அல்லாதார் 36.5 சதவிகிதம் தான் அரசு வேலையில் இருந்தனர். அதுவும் கீழ்மட்ட உத்தியோகத்தில்தான் 6.2 சதவிகிதம் இருந்த முஸ்லீம்கள் 5.5 சதவிகிதமும், 2.2 சதவிகிதம் இருந்த இந்திய கிறிஸ்தவர்கள் 4.9 சதவிகிதமும், 0.1 சதவிகிதம் இருந்த ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் 10.9 சதவிகிதமும் அரசு பணிகளில் இருந்தனர்.

திராவிடர் சங்கம் ஆரம்பமாவதற்கு 10-15 ஆண்டுகளுக்கு முன் மாநில சிவில் சர்வீசுக்கு நடந்த தேர்வில் வெற்றிப் பெற்ற 16 பேரில் 15 பேர் பார்ப்பனர்கள். அசிஸ்டென்ட் இன்ஜீனியர் வேலைக்கு நடந்த தேர்வில் வெற்றிப் பெற்ற 21 பேரில் 14 பேர் பார்ப்பனர்கள்.

துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பதவியில் இருந்த 140 பேரில் பார்ப்பனர்கள் 77 பேர். பார்ப்பனரல்லாதோர் 30 பேர். முஸ்லீம்கள் 15 பேர். இந்தியக் கிறிஸ்துவர்கள் 7 பேர். ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் 11 பேர்.

துணை நீதிபதிகள் பதவியில் இருந்த 18 பேரில் பார்ப்பனர்கள் 15 பேர். பார்ப்பனரல்லாதார் 3 பேர்.

மாவட்ட நீதிபதிகள் பதவியில் இருந்த 128 பேரில் பார்ப்பனர்கள் 93 பேர். பார்ப்பனரல்லாதார் 25 பேர். முஸ்லீம்கள் 2 பேர். இந்தியக் கிறிஸ்துவர்கள் 5 பேர். ஐரோப்பியரும், ஆங்கிலோ இந்தியரும் 3 பேர்.

1907 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரி களுக்கு சட்டசபையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 12 பேரில் 11 பேர் பார்ப்பனர்கள்.

சற்று விழிப்புணர்வு ஏற்பட்ட பிறகு சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1918 ஆம் ஆண்டு:

கலை, அறிவியலில் பி.ஏ. பட்டம் பெற்றோர் மொத்தம் 15,230. பார்ப்பனர்-3213. பார்ப்பனரல்லாதார் 10,269. மற்றவர்கள் 1748 பேர். கலை, அறிவியலில் எம்.ஏ. பட்டம் பெற்றோர் மொத்தம் 509 பேர். பார்ப்பனர்-65. பார்ப்பனரல்லாதார் 389. மற்றவர்கள் 55 பேர்.

ஆசிரியர் பயிற்சிப் பெற்றவர்கள் மொத்தம் - 1498. அதில் பார்ப்பனர்கள் 163. பார்ப்பனரல்லாதார் 1094. மற்றவர்கள் 241.

சட்டத்தில் பட்டம் பெற்றவர்கள் மொத்தம் 54. பார்ப் பனர்கள் - 4; பார்ப்பனரல்லாதார் - 48; மற்றவர்கள் 2 பேர்.

சிவில் என்ஜினியரிங் பட்டம் பெற்றவர்கள் மொத்தம் 159. பார்ப்பனர்கள்-15; பார்ப்பனரல்லாதார் 121; மற்றவர்கள் 23 பேர்.

இந்த மாற்றத்தினை 1914 ஆம் ஆண்டின் புள்ளி விவரத்தைப் பார்த்தால் புரியும். அந்த ஆண்டில் சென்னை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் மொத்த எண்ணிக்கை 950 பேர். அதில் 452 பார்ப்பனர்கள். 124 பார்ப்பனரல்லாதார். 74 பேர் மற்ற சமூகத்தார்கள்.

1912 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளில் திராவிடர்களின் நிலை எப்படி இருந்தது என்றால், சென்னை மாகாண அரசின் பொதுப் பணித் துறையில் பணியாற்றிய 635 பேர்களில் 398 பேர் பார்ப்பனர்கள். 125 பேர் பார்ப்பனரல்லாதார். 12 பேர் மற்றவர்கள்.

வருவாய்த் துறையில் 800 முக்கிய பதவிகளில் பணியாற்றியவர்கள் 638 பார்ப்பனர்கள். 130-பார்ப்பனரல்லாதார். 32-மற்றவர்கள்.

நீதித் துறையில் பணியாற்றிய 216 பேரில் பார்ப்பனர்கள் 143. பார்ப்பனரல்லதார் 56. மற்றவர்கள் 17.

கல்வித் துறையில் பணியாற்றிய 390 பேர்களில் 310 பார்ப்பனர்கள்; 29-பார்ப்பனரல்லாதார்.

பார்ப்பனரின் வர்ணாஸ்ரம மனுதர்ம வெறிக்கு சில உதாரணம்:

1935 ஆம் ஆண்டில் கும்பகோணம் நகராட்சியில் அக்கிரகாரத்துக்குக் கக்கூஸ் எடுக்க தாழ்த்தப் பட்டவர்களை நியமிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக மலம் எடுக்க சூத்திரர்களை நியமிக்க வேண்டுமென பார்ப்பனர்கள் வலியுறுத்தினர்.

1938 ஆம் ஆண்டு நீடாமங்கலத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் மூன்று ஆதி திராவிடத் தோழர்கள் சரிசமமாக உட்கார்ந்து விருந்து சாப்பிட்டனர் என்பதற்காக அவர்களை மொட்டை அடித்து மரத்தில் கட்டி வைத்து அடித்தனர்.

1921 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் இரண்டு பார்ப்பனர்கள் விவசாய வேலை செய்தனர் என்பதற்காக அவர்கள் சாதி நீக்கம் செய்யப்பட்டனர். இதற்கு உடந்தையாக இருந்த சங்கராச்சாரி அந்தப் பகுதிக்கு சுற்றுப் பயணம் வந்தபோது அந்த இரு பார்ப்பனர்களும் வழங்கிய காணிக்கையை ஏற்க மறுத்து தன் சாதி வெறியை வெளிப்படுத்தினார்.

1940 ஆம் ஆண்டுகளில் சென்னை வில்லிவாக் கத்தில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் வசித்தவர் களுக்கு வந்த கடிதங்களை, அஞ்சல்காரர்கள் ஊர் எல்லையிலேயே உள்ள ஒரு கோயிலிலே வீசி எறிந்துவிட்டுப் போனார்கள்.

1943 இல் கும்பகோணம் அரசினர் கல்லூரியில், பார்ப்பன மாணவர்களுக்குத் தனியாகவும், பார்ப்பன ரல்லாத மாணவர்களுக்குத் தனியாகவும் தண்ணீர் பானைகள் வைக்கப்பட்டிருந்தது.

1939 ஆம் ஆண்டு மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவுப் போராட்டம் நடத்தியவுடன் கோவிலை விட்டு மீனாட்சியே ஓடிப் போய் விட்டாள் என்று பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்து கோவிலுக்குப் பூட்டும் போட்டு விட்டார்கள்.

இரயில்வே துறை நடத்திய சிற்றுண்டி விடுதிகளிலும் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் தனித் தனியே இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.

திருவையாறு தியாகராயர் விழாவில் தண்டபாணி தேசிகர் தமிழ் பாட்டுப் பாடினார் என்பதற்காக, மேடை தீட்டாகிவிட்டது என்று பார்ப்பனர்கள் தீட்டுக் கழித்தனர்.

1936-37 இல் ஆட்சிக்கு வந்த இராஜகோபாலாச் சாரியார் போதிய நிதி வசதியில்லை என்று காரணங் கூறி கிராமப் புறங்களில் இருந்த 2200 துவக்கப் பள்ளிகளை இழுத்து மூடினார். அதே நேரத்தில் ரூ.12 இலட்சம் செலவில் பார்ப்பனர்களுக்காக வேத பாடசாலைகளைத் துவக்கினார்.

**(தொடரும்)**

## கடத்தூரில் திராவிடர் இயக்க நூற்றாண்டு விழா

திராவிடர் இயக்க நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 16.6.2012 சனிக் கிழமை மாலை 7 மணிக்கு மடத்துக்குளம் ஒன்றியம் கடத்தூரில் கழகத்தின் சார்பில் "திராவிடர் இயக்க நூற்றாண்டு விழா"ப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றியத் தலைவர் நா.ப.கதிரவன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். புலவர் கடவுள் இல்லை அவர்கள் சாமியார்களின் மோசடிகளை விளக்கி, 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்திக்காட்டினார். நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக வெளியீட்டுச் செயலாளர் ஆ.வந்தியதேவன் ஆகியோர் கலந்து கொண்டு, திராவிடர் இயக்கத்தின் தோற்றம், திராவிடர் இயக்கம் நடத்திய போராட்டங்கள், அதனால் இந்த நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்த நன்மைகள், இன்றைக்கும் திராவிடர் இயக்கத்தின் தேவைகள் குறித்து சிறப்புரையாற்றினர்.

### உடுமலையில்

திராவிடர் இயக்க நூற்றாண்டு விழா பிரச்சார தெருமுனைக் கூட்டங்கள் கழகத்தின் சார்பில் உடுமலைப்பேட்டை நகரத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. 14.6.2012 வியாழனன்று மாலை 5.30 மணியிலிருந்து 7 மணி வரை உடுமலைப்பேட்டை ரயில் நிலையம் முன்பும், 7.30 மணியலிருந்து 9.15 மணி வரை ராமசாமி நகரிலும், 15.06.2012 வெள்ளியன்று மாலை 5 மணியிலிருந்து 6.45 வரை சிவசக்தி காலனியிலும், 7 மணியிலிருந்து 8.15 மணி வரை தங்கம்மாள் ஓடைப் பகுதியிலும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் உடுமலை நகரத் துணைச் செயலாளர் சு.சிவசங்கர், மடத்துக்குளம் ஒன்றியத் துணைச் செயலாளர் சு.சிவசங்கர், மடத்துக்குளம் ஒன்றிய துணைச் செயலாளர் மா.மோகன்கமார், மாவட்ட கழகச் செயலாளர் கா.கருமலையப்பன் ஆகியோர் பேசினர். இறுதியில் புலவர் கடவுள் இல்லை, 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியுடன் சிறப்புரையாற்றினார்.

மேற்கண்ட இரு நிகழ்வுகளும் திருப்பூர் மாவட்ட செயலாளர் கா. கருமலையப்பன், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் ந. பிரகாசு, மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சு.சிவானந்தம், மா.மோகன்குமார், கு.மயில்சாமி, துரை. இராஜேந்திரன், மதன் குமார், தெ.மணிகண்டன், நா. அய்யப்பன், உடுமலை யாழ் நடராசன், இரா. பாக்கியநாதன், சு.சிவசங்கர், கோ. விசுவநாதன், மு. வேல்முருகன், க.இரமேசு, தியாகு, ம.தி.மு.க. தோழர்கள் சே. பிரபு, சாந்து முகமது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தோழர்கள் கா.காமராசு, ந. செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சென்னிமலையில் நாத்திகர் விழா எழுச்சி

*ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் மே 5 ஆம் தேதியன்று நாத்திகர் விழா நடைபெற்றது. விழாவானது கொடியேற்று விழா, மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம், பொதுக் கூட்டம் என மூன்று பெரும் விழாக்களாக மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.*

விழாவிற்கான சுவரெழுத்துப் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பலகைகளை மாவட்டம் முழுக்க பெரும்பாலான இடங்களில் அன்பு நாட்டுக் கோழி வளர்ச்சி மைய நிறுவனத்தார் செய்திருந்தனர்.

விழாவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே சென்னிமலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் காலை முதல் இரவு வரை மோகன், பகுத்தறிவாளர் பேரவை சிவக்குமார் மற்றும் சென்னிமலை மாணவர் அணி இசைக்கதிர், கார்த்திகேயன், இனியவன் ஆகியோர் வாகனப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். செல்லுமிடங்களிலெல்லாம் பெரியார் தொண்டர்களுக்கு கிடைக்கும் வரவேற்பாகிய எதிர்ப்பும், ஆதரவும் கலந்த நிலை இருந்தது.

விழாவன்று சென்னிமலை பேருந்து நிலையத்தில் இயக்கக் கொடியினை பெருந்துறை ஒன்றிய அமைப்பாளர் வி.சு. விசு ஏற்றி வைத்தார்.

மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்திற்கு மாவட்ட தலைவர் நாத்திக சோதி தலைமை வகித்தார். ஊர்வலத்தினை பகுத்தறிவாளர் பேரவையினைச் சேர்ந்த மருத்துவர் பி.டி.சக்திவேல் கொடியசைத்து தொடங்கி வைத்தார். ஊர்வலத்தில் ப. இரத்தினசாமி, பகுத்தறிவாளர் பேரவை பெ.சே. மோகன்ராஜ், கோவை ஆறுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவை ஆறுச்சாமி தலைமையிலான தோழர்கள் பறவைக்காவடியில் தொங்கி வருதல், அலகு குத்தி கார் இழுத்தல், ஆணிப் படுக்கையில் படுத்து வருதல், அக்னி சட்டி எடுத்தல், வாயில் அலகு குத்துதல் போன்ற நிகழ்ச்சிகளைச் செய்தனர். குமாரபாளையம் சுவாமிநாதன் தலைமையிலான குழுவினர் மும்முடி கட்டி வந்து, கடவுள் மறுப்புப் பாடல்களைப் பாடியவாறு வந்தனர்.

சென்னிமலை மாணவரணித் தோழர் இசைக்கதிர் முதுகில் அலகு குத்தி கார் இழுத்து வந்தார். அவரோடு ஈரோடு திருமுருகனும் கார் இழுத்தார்.

விழாவின் மற்றொரு சிறப்பாக பேருந்து நிலையத்திலிருந்து தேரடித்திடல் நோக்கி ஊர்வலம் வந்து கொண்டிருக்க, எதிர்முனையில் ஆயிரக்கணக்கான பக்தர் கூட்டம், சித்ரா பௌர்ணமி என்பதால் மலைக்கோவிலில் இருந்து பேருந்து நிலையம் நோக்கி வந்தபோது, நமது கருஞ்சட்டை தோழர்களும், காவியுடை பக்தர்களும் எதிரெதிரே சந்திக்கும் நிலை ஏற்பட்டது. ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டுவிடுமோ என காவல் துறையினரும் பொது மக்களும் பதைப்புடன் நின்று கொண்டிருக்க, நமது தோழர்கள் காட்டிய கட்டுப்பாடும், ஒழுங்கும் நமது இயக்கத்தின் பெருமையை ஊருக்கெல்லாம் பறை சாற்றுவதாக அமைந்தது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக ஆசிரியர் சங்கத்தின் ஈரோடு மாவட்டச் செயலாளரும், மாநில துணைத் தலைவரும், தமிழ் உணர்வாளருமான வி.எஸ். முத்துராமசாமி கலந்து கொண்டார்.

பறை முழக்கம் முழங்க ஊர்வலம் மேடையை அடைந்தது. அலகுகுத்தி வந்த தோழர்கள், மேடையில் கடவுள் மறுப்பு வாசகத்தைக் கூறியபடியே அலகினைக் கழற்ற பொது மக்கள் மயிர்க்கூச்செறிந்தனர்.

குடந்தை சிற்பிராசனின் ‘மந்திர மல்ல தந்திரமே’ என்ற நிகழ்ச்சியுடன் பொதுக் கூட்டம் தொடங்கியது ஈரோடு ஒன்றிய அமைப்பாளர் சசிக்குமார் தலைமை வகிக்க, சென்னிமலை ஒன்றியத் தலைவர் செல்லப்பன் வரவேற்புரையாற்றினார். சென்னிமலை ஒன்றியச் செயலாளர் சி.செல்வராசு முன்னிலை வகித்தார். பகுத்தறிவாளர் பேரவை ப.சிவக்குமார், செல்வராசு, பவானி ஈஸ்வரமூர்த்தி, திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர்.

தோழர் இரத்தினசாமி, 28 வருடங்களுக்கு முன்பு சென்னிமலைப் படிக்கட்டுகள் வழியாக மாட்டு வண்டியை ஏற்றி, அது கடவுள் சக்தியால்தான் நிகழ்ந்தது என ஒரு தரப்பார் பிரச்சாரம் செய்ய, அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, தானும் மற்ற தோழர்களும் மலைமேல் மாட்டுவண்டி ஏற்ற முயற்சிக்க, காவல்துறையால் அனுமதி மறுக்கப்பட்டு, பிறகு பெருமாள் மலையில் மாட்டு வண்டி ஏற்றியதைக் குறிப்பிட்டார்.

மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், உலகப் போராளிகளின் வரலாற்றைக் கூறி, இளைஞர்களே சிந்திப்பீர் என்ற தலைப்பில் எழுச்சியுரையாற்றினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “சாதியின் கட்டமைப்புகள்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். சாதி தோன்றிய விதம், அதனை அழியாமல் வைக்க பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சி, பார்ப்பனர்களிடம் இன்றும் கைகட்டி நிற்கும் பிற்படுத்தப்பட்டோர் தங்கள் அடக்குமுறையை தாழ்த்தப்பட்டோர்களிடம் காட்டும் விதம் பற்றி தெளிவாக விளக்கிப் பேசினார். விழாவில் கழகத் தோழர் சுப்ரமணி- சிவரஞ்சனி இணையரின் பெண் மகவுக்கு கபிலன் என்று தலைவர் பெயர் சூட்டினார். இறுதியில் சேகர் நன்றி கூறினார்.

விழாவிற்கு ஏற்பாடுகள் செய்ததில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது, அன்பு நாட்டுக் கோழி வளர்ப்பு மையத்தின் நிர்வாகிகள் சசிக்குமார், மோகன்ராஜ், சண்முகசுந்தரம் ஆகியோர் நிறுவனத்தின் சார்பில் பெரும்பாலான செலவினங்களை ஏற்றுக் கொண்டு பெரிதும் துணை நின்றனர்.

வாகனப் பிரச்சாரத்தின் மூலமாகவும், விளம்பரப் பதாகைகள் மூலமாகவும் ஈர்க்கப்பட்டு விழாவிற்கு வந்திருந்து, விளக்கம் பெற்று, இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட தோழர்களின் பெயர்கள் வருமாறு:

மரவபாளையம் ரவிக்குமார்-ஜோதி இணையர் என்.சண்முகம், கே. பழனிச்சாமி, கார்மேகம், அன்பரசன், மதியரசன், மீனாட்சிபுரம் ரகுபதி, முத்தூர் மதிவாணன், ஊத்துக்குளி சந்திரன், செந்தில்குமார், சண்முகம், ரமேஷ்குமார், ஈஸ்வரன், பிடாரியூர் துரைசாமி, குப்புசாமி, பெருந்துறை ஜெயராம், வெப்பிலி வேலு, வெள்ளோடு மூர்த்தி, கோபி, உப்பிலிபாளையம், ரமேஷ்குமார், தங்கராசு, ஊட்டி நந்தகுமார் ஆகியோர்.

**செய்தி: ப. இரத்தினசாமி (தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர்)**

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

பிரச்சாரத்தில் க.இராமர் பங்கேற்று உரை நிகழ்த்தினார். நான்கு நாட்களும் குழுவினருக்கு உணவு மற்றும் தங்குவதற்கு கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்தனர்.

1.7.2012 அன்று காலை 10 மணியளவில் திண்டிவனம் செஞ்சி ரோடு பேருந்து நிலையத்திலும், காலை 11 மணிக்கு திண்டிவனம் பாண்டிரோடு நிறுத்தத்திலும், பிற்பகல் 1 மணியளவில் சித்தாமூர் நான்கு முனை சாலையிலும் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்கு பிறகு மாலை 5 மணியளவில் மதுராந்தகம் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 6 மணியளவில் செங்கல்பட்டு பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. நிகழ்வில் விழுப்புரம் மாவட்ட பொறுப்பாளர் கோ.சாக்ரடீசு பங்கேற்றார். பெரியார் பற்றாளர் சாரதாமேல்நிலைப் பள்ளி நிறுவனர் திருவாசகம் அவர்களுக்கு கழக வெளியீடுகளை பயணக் குழுவினர் வழங்கினர்.

2.7.2012 அன்று காலை 9 மணியளவில் சிங்க பெருமாள் கோயில் பேருந்து நிலையத்திலும் காலை 10 மணியளவில் மறைமலை நகர் திருவள்ளுவர் சாலையிலும், காலை 11.15 மணியளவில் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையத்திலும், பிற்பகல் 12.30-க்கு தாம்பரம் அம்பேத்கர் சிலையருகிலும், பிற்பகல் 1.15-க்கு பல்லாவரம் அம்பேத்கர் சிலையருகிலும் பரப்புரை நடைபெற்றது. குழுவினரை காஞ்சிபுரம் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த தெ.தென்னவன், செல்வம் இரா.செந்தில்குமார் மற்றும் கழகத் தோழர்கள் கரு. அண்ணாமலை, மாவட்ட பொருப்பாளர் தினேஷ், குன்றத்தூர் பரந்தாமன், வெங்கடேசன் ஆகியோர் பங்கேற்று வரவேற்றனர். மறைமலை நகரில் தெ. தென்னவன் உரை நிகழ்த்தினார்.

### பரப்புரைக்கு பெண்களிடம் வரவேற்பு

தொடர் பரப்புரையில் கு.அன்பு தனசேகர், இரா. உமாபதி, சுகுமார், ஜான் குரு, சரவணன், ந. அய்யனார் உரை நிகழ்த்தினர். கழகத் தோழர்கள் செந்தில் மனோகர், அசோக், முழக்கம் உமாபதி, பழனி மருதமூர்த்தி, ராசன் ஆகியோர் தொடர் பயணத்தில் பங்கேற்று பொது மக்களிடத்தில் துண்டறிக்கை அளித்தும், கடை வசூல் செய்து வந்தனர். இந்த பயணத்தில் சிற்பி ராசன் பங்கேற்று பல்வேறு இடங்களில் ‘மந்திரமல்ல தந்திரமே’ என்கிற அறிவியல் விளக்க கலை நிகழ்ச்சியை நிகழ்த்தினார். ஏராளமான இடங்களில் பொது மக்களே துண்டறிக்கைகளை வாங்கிப் படித்தனர். பல இடங்களில் இளைஞர்கள் அந்தப் பகுதியில் இருக்கும் தீண்டாமைக் குறித்துப் பேசினர். கழகத் தோழர்களின் கருத்துகளைக் கேட்டு ஏராளமான பெண்கள் கழகத்திற்கு நிதி தந்தனர். பெரும் கடைகள் நிறுவனங்களைக் காட்டிலும் சிறு கடைகளிலும் சாலை ஓரங்களில் கடை போட்டுள்ளவர்களே அதிகளவில் நிதி தந்தனர்.

பல்வேறு இடங்களில் பெரியார் பற்றாளர்கள், கழகத் தோழர்களின் செயல்பாட்டை பாராட்டினர். துண்டறிக்கை வழங்கும் தோழர்களிடம் கழக செயல்பாட்டை பாராட்டிக் கருத்து தெரிவித்தனர். சாதி உணர்வுள்ள சிலர் துண்டறிக்கை வாங்கவே மறுத்தனர். பல இடங்களில் இப்போது யாருங்க ஜாதி பார்க்கிறார்கள் என்ற கேள்விக்கு கழகத் தோழர்கள் தமிழகத்தில் நிலவும் ஜாதி தீண்டாமை கொடுமைகளை ஆதாரத்துடன் விளக்கினர். இந்தத் தொடர் பரப்புரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் இணைந்து பணியாற்ற முன் வந்துள்ளனர். கழக வெளியீடுகள் ரூ.6 ஆயிரத்துக்கு விற்பனையானது. உண்டியல் மூலம் மக்கள் தந்த தொகை ரூ.32,000. வாகன ஓட்டுநர் சண்முகம் பரப்புரைக்கு உதவிகரமாக இருந்தார்.

**செய்தி: ந. அய்யனார்**

**வந்த கடிதம்**

### மனுதர்மத்தை தோலுரித்த அரிய கட்டுரை


‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ (14.6.2012) இதழில் ‘அரசியல் சட்டத்துக்கு சவால்விடும் மனுதர்மம்’ என்ற தலைப்பில் வினாவிடை வடிவில் மனுதர்மம் பற்றி வெளிவந்த கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பெரியார் கருத்தை அரைகுறையாக அறிந்திருந்த எனக்கு முழுமையாக தெளிவும் விழிப்புணர்வும் கிடைத்தது. மனுதர்மத்தின வண்டவாளங்களை தண்டவாளம் ஏற்றிய அக்கட்டுரையை வெளியிட்ட பெரியார் முழக்கத்தை வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

**– எல்.வீரக்குமார், 11 நல்லிக்கவுண்டனூர், அய்யம்பாளையம், ஈரோடு மாவட்டம்.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 5th July 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2043 ஜூலை 12, 2012 புரட்சி 11 முழக்கம் 26 விலை: ரூ.2.50

## அதிகாரத் திமிர் வெறியாட்டங்களை எதிர்த்து நின்ற

# தோழர் பழனி கொடூரமாகக் கொல்லப்பட்டார்

*தனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்களின் கருத்துரிமைகளை மறுத்து கொத்தடிமைகளாக மிரட்டி ஒடுக்கி வைத்திருந்த தளி சட்டமன்ற உறுப்பினரின் அதிகாரத் திமிரை எதிர்த்து நின்ற கழகத் தோழர் பழனி சுடப்பட்டு, வெட்டப்பட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ளார்.*



தமிழக கர்நாடக எல்லைப் பகுதியான கிருட்டிண கிரி மாவட்டத்தில் "தளி" சட்டமன்ற தொகுதி இருக்கிறது. இந்திய பொதுவுடமை கட்சியைச் சார்ந்த இராமச்சந்திரன் இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். இவரின் சொந்த ஊர் தளி தொகுதியின் எல்லை ஓரமாக இருக்கும் கெலமங்களம் (வேப்பினப்பள்ளி தொகுதியின் எல்லையோரம்). கெலமங்களத்தை சுற்றியுள்ள பல ஊர்களிலும் இவர் சார்ந்திருக்கும் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் இயங்கக் கூடாது என்ற கருத்துள்ள அராஜவாதியாக இருந்து வருகிறார். தி.மு.க.வைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுகவனம், இந்தப் பகுதிக்குப் பிரச்சாரம் செய்ய வந்தபோது, இவரது ஆட்களால் தாக்கப்பட்டு விரட்டியடிக்கவும் பட்டார். தன்னை பொது வுடமைக் கட்சியில் இணைத்துக் கொண்டிருந் தாலும், கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களையும் கோடிக்கணக்கான சொத்துக்களையும், அடியாட்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு, ஆதிக்க சிந்தனை உள்ள நிலச்சுவான்தாரர்களைவிட மோசமான செயலாகத் தான் அந்தப் பகுதியில் இவருடைய போக்கு இருந்து வருகிறது.

இந்த ஊருக்கு அருகே உள்ள அலேசீபம் ஊராட்சி பாலேபுரம் கிராமத்தில் வசித்து வந்த மு.பழனி, மார்க்சிய பொதுவுடமை கட்சியில் பகுதி செயலாளராக பணியாற்றி, பின்னர் தமிழ்நாடு விடுதலை படை அமைப்பிற்கு ஆதரவாளராக இருந்து வந்து, பல ஆண்டுகளாக எந்த ஒரு அமைப்பிலும் தன்னை இணைத்துக் கொள்ளாமல் இருந்த அவர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெரியார் திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு, அந்தப் பகுதியில் முழு நேரப் பணியாளராக செயல்படத் தொடங்கினார். பல புதிய இளைஞர்கள் அமைப்பை நோக்கி வேகமாக வரத் தொடங்கினர். ஓராண்டிற்கு முன்பு நீலகிரி என்ற ஊரில் புதிதாக இணைந்த தோழர்கள் கழக சீருடையான கருப்புச் சட்டையை எல்லா நாட்களிலும் அணிய தொடங்கினர். இதைப் பார்த்த இராமச் சந்திரனின் ஆட்கள் ஒரு தோழரின் வீட்டிற்குச் சென்று, வேறு எந்த கட்சியிலும் இணையக் கூடாது, இங்கு யாரும் கருப்புச் சட்டையும் அணியக் கூடாது என்று மிரட்டி, அந்த தோழரை தாக்கி அவர் அணிந்திருந்த கருப்பு சட்டையை கிழித்து தீயிட்டார். உடனே அருகில் இருந்த பத்துக்கும் மேற்பட்ட புதிய தோழர்கள் இராமச்சந்திரனின் ஆட்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அமைதியாக அவ்விடத்தை விட்டு அகன்ற அவர்கள், பின்னர் தங்கள் சார்பாக, பழனியிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டனர்.

கடந்த உள்ளாட்சித் தேர்தலில், வேப்பினப்பள்ளி தொகுதி நாகமங்கலம் ஊராட்சி தலைவர் பதவிக்கு எம்.எல்.ஏ.வின் மாமாவின் மனைவி வனிதா திம்மராயன் போட்டியிட்டார். அதே பதவிக்கு பெரியார் திராவிடர் கழகத் தோழர் மாருதியின் தாயாரும், கிருஷ்ணாவின் அத்தையுமான நாரா யணம்மாள் போட்டியிட்டார். தி.மு.க., அ.தி.மு.கவை சார்ந்தவர்கள்கூட போட்டியிட முடியாத இந்தப் பகுதியில் கழகத் தோழரின் தாயார் போட்டியிட்டது அவர்களுக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டியது. போட்டியிட்டது மட்டுமின்றி, நியாயமான முறை யில் தேர்தல் நடப்பதற்கான அனைத்து முயற்சி களையும் எடுத்து, முடிந்த வரை கள்ள ஓட்டுகள் போடாமல் தடுக்கப்பட்டது. 130 வாக்குகள் வித்தி யாசத்தில் தோழரின் தாயார் தோல்வியடைந்தார் என்ற போதும் எதிர்த்து போட்டியிட்டதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

நீலகிரி வரதராஜ சாமி கோவில் திருவிழாவில், தோழர் மாருதியின் சித்தப்பா அன்னையப்பாவை வம்புக்கு இழுத்து, அதை காரணமாக வைத்து வீட்டிற்கே சென்று, தேர்தலில் போட்டியிட்ட நாராயணம்மாளின் கணவரையும் அவர்களின் மூன்று மகன்களையும் எலும்பு முறியும் அளவிற்கு தாக்கியுள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக ஓசூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மருத்துவமனைக்கும் சென்று அதுவும் எம்.எல்.ஏ. இராமச்சந்திரனே முன்னின்றும் மீண்டும் தாக்கியுள்ளனர். மருத்துவமனையில் வாக்கு மூலம்

**தளி சட்டமன்ற உறுப்பினரும் அவரது ஆட்களும் நடத்தும் கொடூர படுகொலைகள்!**

வாங்கப்பட்டு, உத்தனப்பள்ளி காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டது. ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையை வாங்கிப் பார்க்கும்போது வாக்குமூலத்திலேயே இராமச்சந்திரனின் பெயர் இல்லை என்பது தெரிய வந்தது. காரணம் அந்தப் பகுதி தோழர்களுக்கு தமிழ் படிக்கத் தெரியாது என்பதால் காவல்துறையினர் தமிழில் தங்களின் விருப்பத்திற்கு எழுதி கையெழுத்தை பெற்றுக் கொண்டார்கள். (அந்தப் பகுதி மக்கள் பெரும்பாலும் கல்வியறிவு அற்றவர் களாக அல்லது தெலுங்கு மட்டுமே அறிந்தவர்களாக இருக்கிறார்கள்)

சில மாதங்களுக்கு முன்பு தேன் கனிக்கோட்டை பேருந்து நிலையம் அருகே நின்றுக் கொண்டிருந்த கழக அமைப்பாளர் பழனி மீது தாக்குதல் நடத்த முயற்சி நடைபெற்றுள்ளது. எம்.எல்.ஏ.வின் அடி யாட்களில் ஒருவரான மூர்த்தி என்பவரின் குவாலிஸ் காரில் பெரியசாமி உள்ளிட்ட அடியாட்கள் அங்கு வந்து அவரை சூழ்ந்துள்ளனர். ஆனால், பழனி அங்கிருந்து தப்பி வந்துவிட்டார். தொடர்ந்து தோழர்கள் மீது நீதிமன்றங்களிலும், வழிகளிலும் தாக்குதல் நடத்த முயற்சிகள் நடந்துள்ளன.

எம.எல்.ஏ.வின் மாமனாரும் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவருமான இலகுமய்யாவின் மனைவியை எதிர்த்து போட்டியிட்ட வெங்கடேஷ் என்பவர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு வெட்டிக் கொல்லப்பட்டார்.

சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரனின் இப்படிப்பட்ட அராஜக போக்குகளை எதிர்த்து, கடந்த சில ஆண்டுகளாக தங்கள் வன்முறையால் அந்த வட்டாரத்தையே மிரட்டி வந்த அந்த வன்முறையாளர்களின் செயல்பாடுகளையும், அவர்களுக்கு உடந்தையாக வழக்குகளைத் திரித்து பதிவு செய்திருக்கிற காவல்துறை கருப்பு ஆடுகளின் நடவடிக்கைகளையும் கண்டித்து 28.4.2012 அன்று கெலமங்களத்தில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமது உரையின் இறுதியில் பாதிக்கப்பட்ட அனைத்து அமைப்பு மற்றும் கட்சிகளும் சேர்ந்து, "மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு" ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தபோது, மக்கள் கூட்டம் வரவேற்று கையொலி எழுப்பியது, உணர்ச்சிகரமாக இருந்தது. மிரட்டலுக்கு பயந்து கிடந்த மக்கள், அச்சத்தை உதறிவிட்டு, அக்கூட்டத்தில் 1500-க்கும் அதிகமானோர் சட்டமன்ற உறுப்பினருக்கு எதிராக திரண்டது, அப்பகுதியில் பலராலும் வியந்து பேசப்பட்டது.

(4 ஆம் பக்கம்)

## கழக அமைப்பு முறைகளை மாற்றியமைக்க மாநில செயற்குழு முடிவு

7.7.2012 அன்று காலை கழக மாநில செயற்குழுக் கூட்டம், சென்னை இராயப்பேட்டை முருகேசன் திருமண மண்டபத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் துரைசாமி உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

5.7.2012 அன்று காலை சமூக விரோதிகளால் சுடப்பட்டும், வெட்டியும் கொடூரமாக கொலை செய்யப்பட்ட கிருட்டிணகிரி மாவட்ட அமைப்பாளர் பழனி (எ) மு. பழனிசாமிக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அரசும் காவல்துறையும் இதில் தனிக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் தலைமை செயற்குழுக் கூட்டத்தில் கழகத்தில் நிலவும் கழகப் பணிகளிலுள்ள சுணக்கம், கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தைப் பரப்புதல், தமிழக அரசியல் சூழல், கழகத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றைப் பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இறுதியில், கழகத்தின் அமைப்பு முறையை மாற்றி அமைத்து கழகத்தில் புத்தெழுச்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும், கழகத்தின் தலைமை பொறுப்பு முதல் அனைத்து நிலை பொறுப்புகளும் மாற்றியமைக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அவ்வாறு அமைப்பு முறைகளில் மாற்றம் செய்யவும், நெறிப்படுத்தும் வகையிலான ஒரு குழுவை ஏற்படுத்துதல் போன்றவற்றை இறுதி செய்யவும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் துரைசாமி, புதுவை மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பன், ஆலோசனைக் குழு உறுப்பினர் தூத்துக்குடி பால். பிரபாகரன் ஆகியோரைக் கொண்ட குழுவுக்கு அதிகாரம் அளித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# வடமொழி மந்திரம் – சடங்குகளின் ஏமாற்று

*ஆட்சி மொழிக்குரிய தமிழ்ச் சொற்களை உருவாக்கியவரும், பல அரசுப் பணிகளை வகித்தவரும், 'செந்தமிழ் புரவலர்' என்று பாராட்டப் பெற்ற வருமான கீ.இராமலிங்கனார், தனது சுயசரிதையை 'என் வரலாறு' என்ற தலைப்பில் எழுதியுள்ளார். அதில் புரியாத மொழியான 'சமஸ்கிருத மந்திரங் களால்' – அதை நம்புவோர், ஏமாற்றப்படும் நிகழ்வுகளை சுட்டிக்காட்டியுள்ளார்:*

எனக்கு இளமையிலிருந்தே "இவ் வடமொழிச் சடங்கு முறை தமிழ் மக்களுக்கு எவ்வளவு புறம் பானது?" என்பது உள்ளத்தினை உறுத்தி வந்தது; "கண்ணற்ற கபோதிகளாய்த் தமிழ் மக்கள் ஏமாந்து, இச் சடங்குகளுக்கு அடிமைகளாகி விட்டிருக் கின்றனரே!" என வருந்தலானேன். ஒசூரில் நான் குடியிருந்த வீட்டிற்கெதிரே புரோகிதர் ஒருவர் குடியிருந்தார். அவர் மனைவியின் தம்பி பன்னிரண்டு அகவைச் சிறுவன். கோடை விடுமுறைக்குத் தன் அக்கா வீட்டிற்கு வந்திருந்தான். அவன் அப்போதே தனியே சென்று, தமிழர் வீட்டுச் சடங்குகளை நடத்தி வைத்துவிட்டு, அரிசி, காய்கறி முதலியவற்றைச் சுமந்து வருவான்.

ஒருநாள் அவனை "எங்கிருந்து இவற்றைக் கொண்டு வருகிறாய்?" என்று கேட்டேன்.

"அவ்வூரில் ஒரு திருமணம் செய்து வைத்தேன்; இன்னொரு ஊரில் ஓர் ஈமச் சடங்கு செய்து வைத்தேன்" என்றான்.

"உனக்கு மந்திரம் தெரிய வேண்டுமே" என்றேன்.

சிரித்தான். நான் விடாமல் அக் கேள்வியினைக் கேட்டேன்.

"எனக்குச் சில பாடல்கள் தெரியும். அவற்றை வைத்துக் கொண்டு அடித்துத் தள்ளிவிடுவேன்" எனத் தெலுங்கிற் சொன்னான்!

"அவர்களுக்குத் தெரியாதா? அவை மந்திரங்கள் அல்லவே! எனக் கேட்க மாட்டார்களா?" என்றேன்.

"அக் கவுண்டர்களுக்கு இவையெல்லாம் எங்கே தெரியப் போகிறது" என்றான்.

நானடைந்த வருத்தத்திற்கு அளவேயில்லை. "தமிழக மக்கள் இவ்வளவு ஏமாற்றப்படுகிறார்களே" என்று கவலையுற்றேன். "தமிழிலேயே எல்லாச் சடங்குகளையும் செய்யும் நாள் என்று வருமோ?" என்றேங்கினேன்.

என்னுள்ளத்தில் அடர்ந்தெழுந்த அவாவினை மேலும் அடரச் செய்யும் முறையில் வேறொரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு பெரிய ஊரில் உயர்நிலைப் பள்ளியிற் பள்ளி நிறைவு (School final) வகுப்புப் படித்துவரும் ஓரிளைஞருக்குத் திருமணம். அத் திருமணத்திற்கு அப்பள்ளி ஆசிரியர் பலரும் வந்திருந்தனர். திருமணத்தைச் செய்து வைக்கும் புரோகிதர், செத்த பிறகு நடக்கும் சடங்கிற் சொல்ல வேண்டிய மந்திரங்களைச் சொல்லி வந்தார். இவ் வோசை அப்பள்ளிக்கூட வடமொழி ஆசிரியர் காதிற்பட்டது; அவர் புரோகிதரிடம் விரைந்தார்; புரோகிதரை விறைத்து நோக்கினார்; "என்னங் காணும் இது!" என்றார். புரோகிதர் விழித்துக் கொண் டார். பிறகு அவ் வடமொழி ஆசிரியர் மற்ற ஆசிரியரி டம் நிகழ்ந்ததைச் சொல்லி வருந்தினார். இச் செய்தி என் மனத்தில் வேலை செய்யத் தொடங்கிற்று.

ஒரு பெரிய நகராட்சியில் நான் அலுவல் பார்த்து வந்தபோது, என்னிடமிருந்த ஏவலர்க்குத் திருமணம். அவர் ஒரு திருக்குலத்தார் (ஆதி திராவிடர்). திருமணம் முடிந்து அவர் வந்ததும், "திருமணம் நன்றாய் நடந்ததா?" என்றேன்; "யார் நடத்தி வைத்தது?" என்றும் வினவினேன். "எங்கள் ஐயா" என்றார்; "மந்திரம் சொன்னாரா?" என்றேன்; "ஆம்" என்றார். அவரை நான் பார்க்க விரும்புவதாய்க் கூறினேன். மறுநாளே அந்த "ஐயரை" அலுவலகத் திற்கு அழைத்து வந்து விட்டார் ஏவலர்; "மந்திரங் களை எம் மொழியிற் சொன்னீர்?" என்று கேட் டேன்; "சமற்கிருதத்தில்" என்றார். "அவற்றை எங்கே கற்றுக் கொண்டீர்?" என்றேன். "எங்கள் பெரியவர் எழுதி வைத்துச் சென்றிருக்கின்றனர்" என்றார். அவற்றைக் கொண்டு வந்து காட்டச் சொன்னேன். "அஃது எதற்கையா!" என்று மறுத்துவிட்டார். ஒரு மந்திரம் ஓதிக் காட்டச் சொன்னேன். "அது வேண்டாமையா!" என்று சிரித்தார். "அம் மந்திரம் உங்களுக்கே சிரிப்பாயிருக்கின்றதே; அவற்றை ஏன் நீங்கள் சொல்ல வேண்டும்? தமிழில் உள்ள மந்திரங்களைச் சொல்லிச் சடங்குகளைச் செய்து வைக்கக் கூடாதா?" என்றேன். "தமிழிலேயும் சொல் வதுண்டு" என்று கூறி, "கனாக் கண்டேன் தோழி நான்" என்று முடிகின்ற ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாடல் ஒன்றைச் சொன்னார். "இது நன்றாய் இருக்கிறதே! எல்லா மந்திரங்களையும் தமிழிலேயே இப்படி சொல்லக் கூடாதா?" என்றேன்; சிரித்தார். "ஏன் சிரிக்கிறீர்?" என்றேன். தமிழிற் சொன்னால் "துட்டுக் கொடுக்க மாட்டாங்க ஐயா!" என்று சொல்லி, மேலும் சிரித்தார்; கும்பிடு போட்டு அனுப்பி வைத்து விட்டேன்.

இவ்வாறே சிலர் தேசிகர் என்னும் பட்டத்தினை வைத்துக் கொண்டு தப்புந் தவறுமாய்ச் சமற்கிருத மந்திரம் என்னும் சொற்களைக் கற்றுக் கொண்டு அவற்றை ஓதித் தமிழர் வீட்டுச் சடங்குகள் அவ்வளவையும் செய்து வைப்பதைப் பார்த்திருக் கிறேன். நானிருந்த நகராட்சி ஒன்றில் ஆசிரியராய் இருந்த தேசிகர் ஒருவரும் இவ்வாறு செய்து வந்தார். அவர் குறித்து வைத்திருக்கும் சமற்கிருத மந்திரக் குறிப்பேட்டை என்னிடம் காட்டுமாறு எத் தனையோ முறை கேட்டேன். அவர், "இன்று நாளை" என்று நான் அவ்வூரிலிருந்த இரண்டு மூன்று ஆண்டு காலம் வரை சொல்லி வந்தார். "அவர் ஓதும் சமற்கிருத மந்திரங்கள் பற்றி என்ன கருத்துக் கொள்ள வேண்டும்?" என்பதே எனக்குப் புரிய வில்லை.

இன்னொரு செய்தியும் இந்நேரத்தில் எனக்கு நினைவிற்கு வருகிறது. "அதுவும் சடங்குகள் யாவும் தமிழில் நடத்தப் பெற வேண்டும்" எனும் என் எண்ணத்தினை மேலும் வலியுறுத்தியது. நான் தருமபுரம் கல்லூரியில் முதல்வராய் இருந்தபோது தென்னாப்பிரிக்காவிலிருந்து ஒரு அன்பர் அங்கு வந்தார். அவர் பெயர் கோவிந்தசாமி (பிள்ளை). அயல்நாட்டில் அவர் ஒரு கல்வி நிறுவனத்தின் முதல்வர். அங்கு நடந்த ஒரு திருமணத்தைப் பற்றி அவர் கூறினார். ஒரு செல்வர் வீட்டுப் பெண்ணுக்குத் திருமணம்; பெண், பி.ஏ. பட்டம் பெற்றவர்; பெற் றோருக்கு ஒரே பெண்; அந்நாட்டில் இன்னொரு தமிழ் பெருமகனாரின் ஒரே பிள்ளைக்கு அப் பெண்ணை மணம் செய்விக்க ஏற்பாடு செய்தனர். மாப்பிள்ளை தோற்றத்தாலும், கல்வியாலும் அப் பெண்ணுக்கு ஒத்தவராயில்லை. அப்பெண்ணுக்கு அவர் பிடிக்கவில்லை.

விருப்பமின்மையை மறைமுகமாயறிந்திருந்தும் தந்தையார் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்தார். திருமணமும் மிகச் சிறப்பாய் நடந்தது; நகரப் பெருமக்கள் பலரும் அதிற் கலந்து கொண்டனர்; மணச் சடங்கு முடிந்த பிறகு மணநிறை விற்கு ஒரு நாள் குறித்திருந்தனர். அதற்குள் அப் பெண்மணி தன் நண்பரோடு நீதிமன்றம் சென்று, "அம் மணம் செல்லாதெனத் தீர்ப்பு அளிக்குமாறு" விண்ணப்பித்தார். நீதிபதி அதனை ஏற்று உடனடி யாய் மணமகள் பெற்றோருக்கும், மணமகனுக்கும் அவர் பெற்றோருக்கும் அறிவிப்பனுப்பினார். பெற்றோர், திருமணம் நடந்தமைக்குச் சான்றாய்த் திருமண அழைப்பினைக் காட்டி, "வந்திருந்து வாழ்த்தியவர், திருமணம் செய்து வைத்த புரோகிதர், முதலாயவரை அழைத்துக் கேட்டாய்ந்து திருமணம் நடந்த உண்மையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு தீர்ப்பளிக்க வேண்டும்" என்று கோரினர். முறைப்படி பலரும் அழைக்கப் பெற்றனர்; "திருமணம் நடந்தது உண்மை" என்று அவர்கள் விளக்கினர். நீதிபதி, "திருமண நிகழ்ச்சி இத்துணை உண்மையாய் இருக்க உன் குறை என்ன?" என்று அப்பெண்ணை கேட்டார்.

"என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாதே" என்றார் அப்பெண். "ஏன் அப்படி?" என்று நீதிபதி புரோகிதரை அழைத்துத் திருமணத்திற் சொல்லிய சொற்களை எடுத்து விளக்கச் சொன்னார். விளக்கிய போதும் அப்பெண், "புரோகிதர் சொன்னது என்னவென்றே எனக்குத் தெரியவில்லை" என்றார். அப்பெண்ணுக்குத் தமிழ் தெரியும்; ஆங்கிலம் தெரியும்; ஆனால், சமற்கிருதம் தெரியாது. திருமணச் சடங்கு சமற்கிருதத்தில் நிகழ்த்தப் பெற்றது. இதனை நீதிபதி மகனுக்கோ, அவர்கள் பெற்றோர்க்கோ, வந்து வாழ்த்திய பெருமக்களுக்கோ ஒரு துளியும் தெரியாது; வாழ்க்கையில் ஒப்பற்ற சிறந்த நிகழ்ச்சியான திருமணம், மணமக்களுக்குத் தெரிந்த மொழியிலே நடத்தப் பெற்றிருக்க வேண்டும்; அப்படிச் செய்யப் பெறவில்லையே!" என்று வியந்து அத் திருமணம் செல்லாது என்று தீர்ப்புக் கூறினார்.

**"என் வரலாறு" நூலிலிருந்து**

## மனித உறுப்புகளை கூறு போட்ட 'மனுதர்ம'த்துக்கு மாணவி தந்த மரண அடி

*உலகத்தைப் "படைத்த" பிர்மா, தனது தலையிலிருந்து 'பிராமணனை'யும், தோளிலிருந்து 'சத்திரியனை'யும், தொடையிலிருந்து 'வைசியனை'யும், காலிலிருந்து 'சூத்திரனை'யும் படைத்ததாக 'மனுசாஸ்திரம்' கூறுகிறது. பிறப்பின் அடிப்படையிலே மனுதர்மம் கற்பித்த இந்த ஏற்றத் தாழ்வுகளை, சாதியமைப்பு உள்வாங்கிக் கொண்டது. சாதியமைப்பு, 'மனு சாஸ்திரத்தை' அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகிறது. இதன் காரணமாகவே சாதிப் பிளவுகள் சமூகத்தை சீரழித்து வருகின்றன. சாதி மாறி திருமணம் செய்து விட்டால், சாதிச் சமூகமும், சாதிக் குடும்பமும் துள்ளிக் குதிக்கின்றன. வாழத் தகுதியற்றவர்களாக்கி, மரண தண்டனை வழங்கவும் குடும்பத்தினரே முற்படுகின்றனர்.*

'பிர்மா' தனது உடலையே 'தலை', 'தோள்', 'தொடை', 'கால்' களை ஏற்றத் தாழ்வுக்கு உள்ளாக்கிய இந்த சமூகக் கொடுமை, மனித உடலுக்குள்ளேயே கூறு போடும் இந்த 'சமூக வக்கிரம்' சுக்குநூறாக உடைத்தெறியப்பட வேண்டும். அதுவே 'மனித நேயம்' என்பதற்கு சான்றாக இப்போது ஒரு உள்ளத்தை நெகிழச் செய்யும் செய்தி வந்துள்ளது.



மாணவி சரண்யா

கோவையைச் சேர்ந்த பொறியியல் கல்லூரியில் படித்த மாணவி சரண்யா, தனது தோழர்களுடன் காரில் சென்றபோது, லாரி மோதியதில் தலையில் அடிபட்டு மூளைச் சாவுக்கு உள்ளாகி விட்டார். இவர் உடன் வந்த 5 தோழர்களும் மரணமடைந்துவிட்டனர். கடந்த மார்ச் மாதம் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்ற சரண்யா, 'இன்போசிஸ் மென் பொருள்' நிறுவனத்தில் நல்ல ஊதியத்தில் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் சமூகப் பணிகளில் துடிப்புடன் செயலாற்றிய சரண்யா மறைவுக்கு செலுத்தும் சரியான மரியாதை, அவரது உடல் உறுப்புகளை கொடையாக வழங்குவதே என்ற சரியான முடிவை அவரது பெற்றோர்கள் எடுத்தனர். சரண்யாவின் ஈரல், இரு இருதய வால்வுகள், இரண்டு கண்கள் எடுக்கப்பட்டன.

மூளைச்சாவுக்கு உள்ளானவர்கள் உடல் உறுப்புகள் 48 மணி நேரத்துக்குள் பொருத்தப்பட வேண்டும். சென்னை அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் விமானத்தில் கோவை சென்று, விமானம் வழியாக உடல் உறுப்புகளை கொண்டு வந்து, தனது மருத்துவமனையிலும், வேறு சில தனியார் மருத்துவமனையிலும் 7 நோயாளிகளுக்கு உறுப்புகளைப் பொருத்தி, அவர்களுக்கு மறுவாழ்வு தரப்பட்டுள்ளது. சரண்யா பிறந்த சாதியைச் சேர்ந்த நோயாளிகளைத் தேடிப் பார்த்து இந்த உறுப்புகள் பொருத்தப்படவில்லை. இவை தேவைப்படுவோரை தேர்வு செய்தே இந்த உறுப்புகள் பொருத்தப்பட்டன.

கடவுளின் தலை, தோள், தொடை, காலில் – ஏற்றத் தாழ்வுகளை நிர்ணயித்த பார்ப்பன மனு வாதத்துக்கு விழுந்த சரியான 'மரண அடி'யை சரண்யாவின் கண்களும், இருதய வால்வுகளும், ஈரல்களும் தந்துள்ளன.

மரணத்திலும் 7 பேருக்கு மறு வாழ்வு தந்துள்ளார் சரண்யா. அதே நேரத்தில் மரணத்தின் புதை குழிக்குள் ஆழப் புதைக்கப்பட வேண்டியது 'மனுதர்மம்' என்பதையும் நிரூபித்துள்ளார். சாதி விட்டு சாதி திருமணம் செய்து விட்டால் வெட்டறிவாளையும், பட்டாக் கத்தியையும் தூக்கிக் கிளம்பும் சாதி வெறிக் கூட்டங்களே! இந்த மனித நேயத்தைக் கண் திறந்து பாருங்களய்யா!

## அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் வழக்கறிஞர் துரைசாமி விளக்கம்:

# நீதிக்கட்சி ஆட்சியின் சமூக நீதி சாதனைகள்

***திராவிடர் இயக்கம் வந்த பிறகு தான் தமிழன் தலைநிமிர்ந்தான்; தன்மானம் பெற்றான் என்று வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, வரலாறுகளை சுட்டிக்காட்டி உரையாற்றினார். 24.3.2012 அன்று பெரம்பூர் ராஜலட்சுமி அரங்கில் 'குடிஅரசு' வாசகர் வட்ட தொடக்க விழாவில் அவர் ஆற்றிய உரையின் தொடர்ச்சி:***

நீதிக்கட்சித் தலைவர் சர். பிட்டி. தியாகராயர், சென்னை மாநகர மேயராக இருந்தபோதுதான் முதன் முதலாக பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

நீதிக்கட்சித் தலைவர் சர். பிட்டி.தியாகராயர், சென்னை மாநகர மேயராக இருந்தபோதுதான் சென்னை மாநகரில் கட்டாய ஆரம்பக் கல்வியும், பார்வையற்றோர் பள்ளியும், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லமும் உருவாக்கப்பட்டது.

1921 ஆம் ஆண்டு முதன்முதலாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிட சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது நீதிக்கட்சி அரசு.

1922 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பில் மட்டுமின்றி பதவி உயர்விலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை இடஒதுக்கீட்டை கடைபிடிக்க வேண்டுமென நீதிக்கட்சி அரசு ஆணை பிறப்பித்தது.

ஒவ்வொரு அரசுத் துறையிலும் அந்தந்த துறைகள் மூலமாகவே வேலைக்கு ஆட்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். இதைப் பயன்படுத்தி ஏராளமான வேலைகளுக்கு பார்ப்பனர்களே நியமிக்கப்பட்டு வந்தார்கள். இதை மாற்றிட நீதிக்கட்சித் தலைவர் டாக்டர் சி.நடேசனார் அயராது உழைத்தார். அதன் விளைவாக 1922 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சியில் "ஸ்டாப் செலக்ஷன் போர்டு" ஏற்படுத்தப்பட்டது.

மருத்துவக் கல்லூரிப் பட்டப் படிப்பில் சேர சமஸ்கிருதம் தெரிய வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றியது நீதிகட்சி அரசு.

ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்டோர் பொதுத் தெருவிலும் எல்லாத் தெருவிலும் நடந்து போகலாம் என்று முதன்முதலில் அதற்காகவே தனியாக ஒரு ஆணை பிறப்பித்தது நீதிக்கட்சி அரசு.

கோயில்களின் வருமானத்தை குடும்பத்தோடு கொள்ளை அடித்து வந்த பார்ப்பனக் கொள்ளையை முறியடிக்க இந்துக் கோயில்களை வரைமுறைப் படுத்த இந்து அறநிலையத் துறையை உருவாக்கியது நீதிக்கட்சி அரசு.

பார்ப்பனர்களின் இந்து அற நிலையத் துறையை உருவாக்கியது நீதிக்கட்சி அரசு.

பார்ப்பனர்களின் கடும் எதிர்ப்புக்கிடையே நீதிக் கட்சியின் முதலமைச்சர் பனகல் அரசர் பெரும் முயற்சி எடுத்து 1925 இல் இத்துறையை உருவாக்கினார்.

இந்தியாவிலேயே தாழ்த்தப்பட்டோருக்காக தனியாக அமைச்சகத்தை முதன்முதலில் அமைத்தது பனகல் அரசர் தலைமையிலான நீதிக்கட்சி அரசு.

ஒரத்த நாடு, ராஜமாடம் போன்ற இடங்களில் இருந்த தர்மச் சத்திரங்களில் பார்ப்பனர்களுக்கு மட்டுமே சாப்பாடு என்ற முறையை மாற்றியவர் தஞ்சை மாவட்ட மன்றத் தலைவராக இருந்த நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சர் ஏ.டி.பன்னீர் செல்வம்.

1935 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பேருந்துகளில் "பஞ்சமருக்கு இடமில்லை" என்று எழுதியதோடு டிக்கெட்டுகளிலும் அவ்வாறே அச்சிட்டு இருந்தனர். நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் இராமநாத புரம் மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவருமான டபுள்யூ.பி.ஏ. சவுந்தரபாண்டியன் அதை ஒழித்தார்.

நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் அறங்காவல் குழு தாலுகா போர்டு தலைவருமான எஸ்.ராமச்சந்திரன் சேர்வை தனது பதவிக் காலத்தில் "இனி இந்தக் கையால் ஒரு பார்ப்பனருக்குக்கூட வேலை கொடுக்க மாட்டேன்" என்று பகிரங்கமாக மேடையிலேயே அறிவித்தார்.

குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்களை கோவில்களுக்கு பொட்டுக்கட்டி தேவதாசிகளாக மாற்றும் முறையை ஒழிக்க தேவதாசி ஒழிப்பு மசோதாவை கொண்டு வந்து அம்முறையை முற்றிலும் ஒழித்தது நீதிக்கட்சி அரசு. தேவதாசி ஒழிப்பு மசோதாவை கொண்டுவந்து, அதை சத்தியமூர்த்தி அய்யர் போன்ற பெரிய பார்ப்பனத் தலைவர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி சட்டமாக மாற்ற பெரும்பாடுபட்டவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.

தேவதாசி மசோதா வந்தபோது சட்டத்தை மீறினாலும் மீறுவேனே தவிர சாஸ்திரத்தை மீற மாட்டேன் என்று கூறிய அந்த மசோதாவை எதிர்த்து தேவதாசி முறையை ஆதரித்துப் பேசினார் சத்தியமூர்த்தி அய்யர். "தேவதாசி முறை நீடிக்க வேண்டுமென அய்யர் விரும்பினால் இனிமேல் அவர் இனத்துப் பெண்கள் அதைச் செய்யட்டும்" என்று தந்தை பெரியாரின் கருத்தை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பதிலடியாக கொடுத்தப் பிறகு சத்தியமூர்த்தி அய்யர் வாயை மூடினார்.

கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர்க்க குழுக்களை நியமித்தது நீதிக்கட்சி அரசு.

தனியார் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர் களை சேர்க்கும் வகையில் சட்டம் இயற்றியது நீதிக்கட்சி அரசு.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென தனியாக இருந்த பள்ளிகளை மூடி பிற சாதி மாணவர்களுடன் சேர்ந்து பயில வழி வகுத்தது நீதிக்கட்சி அரசு.

தாழ்த்தப்பட்ட மாணவர்களை சேர்த்துக் கொள்ளாத பள்ளிகளுக்கு அரசு நிதி உதவி தரப்பட மாட்டாது என அறிவித்தது நீதிக்கட்சி அரசு.

தாழ்த்தப்பட்டவர்கள் வீடு கட்டிக் கொள்ள புறம்போக்கு நிலங்களை அளித்தது நீதிக்கட்சி அரசு.

கிறிஸ்துவரை கல்லூரி முதல்வர், சட்டமன்றத் தலைவர், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர், உயர்நீதிமன்ற நீதிபதி, உள்துறை உறுப்பினர் போன்ற பதவிகளில் அமர்த்தியது நீதிக்கட்சி அரசு.

மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் பார்ப்பனர் களுக்கு என்று தனியாக அறைகள் ஒதுக்கப்பட் டிருந்த முறையை ஒழித்தது நீதிக்கட்சி அரசு.

மாவட்ட நீதிபதிகள் நியமனங்களை சென்னை உயர்நீதிமன்றத்தின் பிடியிலிருந்து விடுவித்தது நீதிக்கட்சி அரசு.

அண்ணாமலை பல்கலைக்கழகம், ஆந்திர பல்கலைக்கழகம் ஆகியவற்றை உருவாக்கியது நீதிக்கட்சி அரசு.

துப்புரவு வகுப்பினர், தோடர்கள், கோடர்கள், படகர்கள் ஆகியோருக்கு கூட்டுறவுச் சங்கங்களை நீதிக்கட்சி அரசு ஏற்படுத்தியது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குப் பணி உயர்வு, உயர் பதவி நியமனங்கள் நீதிக்கட்சி அரசால் செய்யப்பட்டது.

தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றங் கருதி தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டதோடு அவர்கள் மேலும் முன்னேற ஐ.எஸ். அதிகாரிகளை லேபர் கமிஷனர்களாக நியமித்தது நீதிக்கட்சி அரசு.

கோவை மாவட்டத்திலுள்ள குறவர், வலையர் ஆகியோரை குற்றப் பரம்பரையில் இருந்து மீட்க சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட துடன் அவர்களின் குழந்தைகளுக்கு 25 ஸ்காலர்ஷிப்புகளை அளித்தது நீதிக்கட்சி அரசு.

ஆதி திராவிடர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டு அதனைப் பயன்படுத்த மூலதனம், பிறசாதியினரிட மிருந்து பாதுகாப்பு, அடமானம் வைக்காமல் இருக்க அறிவுரை இன்னும் பிற தொல்லைகளிலிருந்து மீட்பு என பலவித உதவிகளையும் நீதிக்கட்சி அரசு செய்தது.

ஆதி திராவிடர்களுக்கு விவசாயத்திற்காக நிலங் களை ஒதுக்குகிறபோது, மரங்களின் மதிப்பு அளவு கட்டணத்தை தள்ளுபடி செய்தது நீதிக்கட்சி அரசு.

நிலத்தில் கட்டிடத்தைக் கட்டிக் கொண்டு நில வாடகை செலுத்துவோருக்கு வாடகைதாரர் குடியிருப்புச் சட்டத்தை நீதிக்கட்சி அரசு கொண்டு வந்தது. இச்சட்டப்படி நில உரிமையாளர்களால் அப்புறப்படுத்தப்படுவோம் என்னும் பயம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கியது.

கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்காக தனியாக லேபர் கமிஷன் நியமிக்கப்பட்டு, அவர் சில வழி முறைகளை உருவாக்கித் தர ஏற்பாடு செய்யப்பட் டது. தஞ்சை கள்ளர் மகா சங்கத்தின் வேண்டு கோளை ஏற்று ஐந்து பள்ளிகளை தஞ்சை வட்டாரத் தில் திறக்க நீதிக்கட்சி அரசு உத்தரவிட்டது.

அரசுப் பள்ளிகளில் வகுப்புரிமை - இட ஒதுக்கீடு நிலைநாட்டப்பட, ஆண்டுதோறும் பொதுப் பணித்துறை அறிக்கை வெளியிட வேண்டுமென நீதிக்கட்சி அரசு அறிவித்தது.

கல்லூரித் தலைவர்களே மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்த முறைக்கு நீதிக்கட்சி அரசு தடை விதித்து, ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்களைச் சேர்க்க குழுக்கள் அமைக்கப் பட்டன.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் பொதுப் பாதைகள், பொது இடங்கள், கிணறு, குளம் போன்றவைகளை உபயோகிப்பதை தடுப்பவர்களுக்கு நீதிக்கட்சி அரசு அபராதம் விதித்து ஆணை பிறப்பித்தது.

தலைமைச் செயலகம் பார்ப்பனர்களின் ஏகபோக சொத்தாக இருந்ததை புள்ளி விவரங்களோடு சட்டமன்றத்தில் வெளிப்படுத்தி, "தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் பார்ப்பனர்களுக்கும் திராவிடர்களுக்கும் ஓரளவிற்காவது சமநிலை உண்டாக அடுத்த மூன்று ஆண்டுகள் பார்ப்பன ரல்லாத சமூகத்தினர் மட்டுமே உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வந்து, அத்தீர்மானம் நிறைவேற டாக்டர் சி.நடேசனார் முன்னின்றார்.

"பார்ப்பனரல்லாதாருக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய விகிதாச்சார அளவுக்கு உத்தியோகம் கிடைக்கும் வரையில் இனிமேல் அரசாங்க உத்தியோகங்கள் யாவும் பார்ப்பனரல்லாதாருக்கே கொடுக்கப்பட வேண்டும்" என்ற புரட்சிகரமான தீர்மானம் ஒன்றை 1921, ஆகஸ்டு 5 இல் சட்ட மன்றத்தில் டாக்டர் சி.நடேசனார் கொண்டு வந்தார். பின்னர் நீதிக்கட்சியினர் வேண்டுகோளின்படி தீர்மானத்தைத் திரும்பப் பெற்றார். எல்லா வகுப்பினருக்கும் உத்தியோகத்தில் சமநீதி வழங்கும் வகையில் ஏற்கெனவே ரெவின்யூ துறையில் இருக்கும் நடைமுறையை விரிவுபடுத்தி, எல்லா துறைகளிலும் அதைக் கடைபிடிக்குமாறு செப்டம்பர் 16 இல் ஓர் ஆணையை நீதிக்கட்சி அரசாங்கம் (M.R.O. Public Ordinary Service G.O.No.613 Dated 16.9.21 ) பிறப்பித்தது. நீதிக்கட்சி ஆட்சியின் முதல் வகுப்புரிமை வழங்கும் ஆணை இதுவே ஆகும். பார்ப்பனரல்லாதாருக்கு அரசுப் பணியில் நுழைய ஓர் உத்திரவாதம் அளிக்கும் வகையில் அமைந்த முதல் அரசாணையான இது பார்ப்பன அதிகார வர்க்கத்தால் சரிவர அமுல்படுத்தப்படவில்லை.

நீதிக்கட்சியின், பனகல் அரசர் அமைச்சரவை, 1922 மார்ச் 25 இல் "பஞ்சமர், பறையர்" என்ற சொற் களை நீக்கி, ஆதி திராவிடர் என்றே இனி அழைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றி, அதனை அமுல்படுத்தியது. வேலை வாய்ப் போடு அன்றி பதவி உயர்விலும் வகுப்புவாரி பிரதி நிதித்துவம் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற ஓர் ஆணையை நீதிக்கட்சி ஆட்சி ஆகஸ்டு 15 இல் வெளி யிட்டது. (M.R.O. Public Ordinary Service G.O.No.658 Dated 15.8.22 ) இதுவே நீதிக்கட்சி ஆட்சியின் இரண்டாவது வகுப்புரிமை ஆணையாகும்.

**(தொடரும்)**


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# குற்றவாளிகளை கைது செய்யக் கோரி காவல்துறை இயக்குநரிடம் வற்புறுத்தல்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இப்படி புதிய தோழர்கள் உருவாவதற்கும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுவதற்கும் காரணமானவர் பழனி. இந்த எம்.எல்.ஏ. இராமச்சந்திரன், மார்க்சிய பொதுவுடைமை கட்சியின் இளைஞரணியில் இருந்தபோது, தோழர் பழனி, மார்க்சிய பொதுவுடைமை கட்சியின் பகுதி செயலாளராக இருந்துள்ளார். அப்போது பழனியின் நேர்மையான, துணிச்சலான செயல்களை அறிந்து வைத்திருப்பதால், தன்னை எதிர்ப்பதற்கு பழனியின் துணிச்சல் தான் காரணம் என்று கருதி, பல முறை இவர் மீது கொலை முயற்சிகள் நடைபெற்றன. இதைப் பல இடங்களில் தோழர் பழனி புகாராகவும் தந்திருக்கிறார்.

இந்த நிலையில் கடந்த 5.7.2012 அன்று காலை சுமார் 6 மணியளவில் பழனியும், அவரது மகன் வாஞ்சிநாதனும் வயலில் நீர் பாய்ச்சிக் கொண் டிருந்தனர். இவரது தோட்டத்திற்கு டாடா சுமோ கார் மற்றும் 5 இரு சக்கர வாகனங்கள் வந்து நின்றுள்ளது. அதில் இருந்து இறங்கிய 20-க்கும் மேற்பட்டவர்கள் துப்பாக்கி மற்றும் வீச்சரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் வந்துள்ளனர். அதில் சிலர், தோழர் பழனியின் மகன் வாஞ்சி நாதனை துரத்த, சிலர் பழனியை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளனர். இதனால் நிலைகுலைந்து அவர் கீழே விழுந்துள்ளார். அப்போது அந்த கும்பல் அவரை பல இடங்களில் சரமாரியாக வெட்டியுள்ளார்கள். இதில் அவர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தார். அதன் பிறகும் ஆத்திரம் தீராத அவர்கள், பழனியின் தலையை தனியாக துண்டித்து, காருக்கு அருகே எடுத்து வந்து, காரில் இருந்தவர்களிடம் காண்பித்துவிட்டு கீழே வீசியுள்ளனர். பிறகு அந்த கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டது.

பழனி கொடூரமாக கொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்த அவரின் மகன் வாஞ்சிநாதன் கொடுத்த புகாரின் பேரில், எம்.எல்.ஏ. இராமச்சந்திரன், எம்.எல்.ஏ.வின் அண்ணன் வரதராசன், மாமனார் இலகும்மயா உட்பட 22 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட தகவல் கிடைத்ததும், பிரேத பரிசோதனை செய்யப்பட்ட ஒசூர் அரசு மருத்துவமனையில் ஏராளமான கழகத் தோழர்கள் திரண்டனர். கொலை செய்த சமூக விரோதிகளை உடனே கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி ஒலி முழக்கங்கள் எழுப்பப்பட்டு, மருத்துவமனையில் இருந்து நகரத்தின் எல்லை வரை தோழர்கள் பேரணியாக வந்தனர். மாலை 6 மணி அளவில் கொலை செய்யப்பட்ட தோழர் பழனி உடல், அலேசீபம் ஊராட்சி பாலேபுரம் கிராமத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இரவு 7 மணியளவில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், வழக்கறிஞர் புகழேந்தி, பா.ஜ.க.வைச் சார்ந்த சிவசங்கரன், அயோத்தி தாச பண்டிதர் ஆய்வு மையம் இராமலிங்கம், சித்திரப்பட்டி சின்னுசாமி, சமூக ஆர்வலர் ருத்ரன், மார்க்சிய-லெனினிஸ்ட் விந்தை வேந்தன், தமிழ் தேச பொதுவுடைமைக் கட்சி மாரிமுத்து, தமிழக மக்கள் விடுதலை முன்னணி தமிழரசன் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர், கரூர், நாமக்கல் ஆகிய பகுதியிலிருந்து கழகத் தோழர்களும், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தனர்.

**சாலை மறியல்**

6.7.2012 அன்று மாலை புதுவை மற்றும் சென்னையைச் சார்ந்த கழகத் தோழர்கள் இறுதி ஊர்வலத்திற்கு வந்திருந்தனர். 8 மணியளவில் கழகத் தோழர்களும் ஏராளமான ஊர் பொது மக்களும் சேர்ந்து, குற்றவாளிகளை கைது செய்யக் கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல்துறை உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறிய பின்னர், தோழர் பழனியின் சொந்த ஊரான சந்தூருக்கு உடல் கொண்டு செல்லப்பட்டது. காலை 9 மணி முதல் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. புதுவை மாநில கழகத் தலைவர் லோகு அய்யப்பன், வட சென்னை மாவட்ட தலைவர் கேசவன், தென்சென்னை மாவட்ட செயலாளர் உமா பதி, தமிழ்நாடு விடுதலை படை மாறன், புதிய ஜனநாயகம் இராமலிங்கம், புரட்சிகர விவசாய தொழிலாளர் முன்னணி கோபால், கிருட்டிணகிரி மாவட்ட கழகத் தலைவர் குமார் மற்றும் ஊர் பொது மக்கள் பலரும் இரங்கல் உரையாற்றினர். பிற்கல் 12.30 மணி அளவில் தோழர் பழனியின் உடல் எரியூட்டப்பட்டது.

இதுவரை இந்த பகுதியில் நாற்பதுக்கும் மேற்பட்ட கொலைகள் நடந்திருப்பதாக தெரிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சந்திரப்பா என்பவர் வெட்டப்பட்டு, மருத்துவமனையில் "தன்னை கொலை செய்தது இராமச்சந்திரன் தான்" என்று வாக்குமூலம் கொடுத்து இறந்து போனார். ஆனால், இதுவரை எந்த ஒரு வழக்கிலும் இராமச்சந்திரனின் பெயர்கூட பதியப்படவில்லை. மார்க்சிய-லெனினிஸ்ட் கட்சியைச் சார்ந்த தொப்பி குமார் என்பவர், அவர் சார்ந்த கட்சியின் சுவரொட்டி ஒட்டியதற்காக கடந்த மாதம் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

ஏற்கனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளராக இருந்து, சமீபத்தில் அ.தி.மு.க.வில் இணைந்திருக்கும் நாகராஜ் ரெட்டி, கடந்த மாதம் இரண்டு முறை இவர்களால் தாக்கப்பட்டு தற்போது கழுத்தில் வெட்டப்பட்டு படுக்கையில் இருக்கிறார்.

**காவல்துறை இயக்குனரிடம் வற்புறுத்தல்**

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழக மூத்த வழக்கறிஞர் துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோ ஆகியோர், சென்னையில் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநரை நேரில் சந்தித்து, இராமச்சந்திரனின் இப்படிப்பட்ட அராஜக போக்குகளையும், காவல்துறையின் நடவடிக்கை சுணக்கங்களையும் சுட்டிக் காட்டி, அந்தப் பகுதியில், நேர்மையான புதிய அதிகாரிகளை நியமித்து, பாரபட்ச மின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பயத்தில் உறைந்து கிடக்கும் அந்தப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

12 தனிப் படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தேடும் முயற்சிகளும், புலன் விசாரணையும் தீவிரமாக நடந்து வருவதாகவும் தெரிய வருகிறது.

– **நமது செய்தியாளர்**

# சென்னையில் சாதி ஒழிப்புப் பயண தொடக்க விழா




22.6.2012 அன்று மாலை 6மணிக்கு மந்தைவெளி மார்க்கெட் அருகில் திராவிடர் இயக்க நூற்றாண்டில் ஜாதிய வாழ்வியல் எதிர்ப்பு மனுதர்ம சாஸ்திர எரிப்புப் போராட்டம், பரப்புரை பயணத் தொடக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தி.இராவணன் தலைமை வகிக்க, சு.அம்பிகா, இரா.குமார் முன்னிலையில் ஜா.ஜெயந்தி வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினர். நிகழ்வின் தொடக்கத்தில் சமர்பா இசை நிகழ்ச்சி நடந்தது. நாத்திகன், சாதி ஒழிப்புப் பாடல்களை பாடினார். இரவு 7.30 மணிக்கு சிற்பி இராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வின் முடிவில் இரா. மாரி நன்றியுரையாற்றினார். கூட்டத்துக்குப் பிறகு, கழகத்தின் கொள்கை எழுத்துப் பலகையை மந்தைவெளியில் கழகத் தலைவர் திறந்து வைத்தார்.

# கொமாரப் பாளையத்தில் கழகக் கொடி ஏற்றம்

27 5.2012 அன்று கொமாரபாளையம் கழகம் நடத்திய திராவிட இயக்க நூற்றாண்டு விழா மனு சாஸ்திர எரிப்பு விளக்கக் கூட்டம் கொமாரபாளையம் நகரப் பகுதியில் நடைபெற்றது. அதையொட்டி புதிய கழகக் கொடிக் கம்பங்களில் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டன. காவேரி நகர் புதுப்பாலம் அருகில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், நகராட்சி அலுவலகம் அருகில் பொதுச் செயலாளர் இராமகிருட்டிணனும், மெயின்ரோடிலுள்ள ஆர்.ஏ.எஸ்.தியேட்டர் அருகில் நகர தலைவர் இரா. திராவிடமணியும், பேருந்து நிலையம் அருகில் கேப்டன் அண்ணாதுரையும் கழகக் கொடிகளை ஏற்றி வைத்தனர். இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் மு.சாமிநாதன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# சாதி மத மறுப்பு மண விழா



சேலம் மாவட்டம் ஆவத்திப் பாளையம் முருகேசன்-சின்னப்பா இணையரின் மகன் கழகத் தோழர் சரவணன்; ஆவத்திப்பாளையம் ஷாஜ கான்-மைதிலின் பீபி இணையரின் மகள் ஷஜீனா ஆகியோரின் மத மறுப்பு, தாலி சடங்குகள் தவிர்ப்பு வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் 28.6.2012 அன்று பகல் 11 மணிக்கு பள்ளி பாளையத்தில் நடந்தது.


மணமக்களை வாழ்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர் இரத்தினசாமி, நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சாமிநாதன், ஈரோடு மாவட்ட தலைவர் நாத்திகசோதி, திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி, புரட்சிகர தொழிலாளர் முன்னணி மாணிக்கம், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் விழாவின் மகிழ்வாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.2000 அளித்தனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th July 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜுலை 19, 2012 | புரட்சி 11 | முழக்கம் 27 | விலை: ரூ.2.50


## தோழர் பழனி வீரவணக்க கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறைகூவல்



# முதலமைச்சர் கவனத்தை ஈர்க்கும் போராட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரில் நிலப் பிரபுத்துவவாதியாக தளி சட்டமன்றத் தொகுதியில் தனியான ‘வன்முறை அரசை’ நடத்தி வந்த ஆதிக்கவாதிகளை மக்களுக்காக தட்டிக் கேட்ட கிருஷ்ணகிரி மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் மு.பழனி படுகொலையைக் கண்டித்து வீரவணக்கம் செலுத்தும் நினைவேந்தல் பொதுக் கூட்டம் 15.7.2012 மாலை 4.30 மணியளவில் இராயக்கோட்டை பேருந்து நிலைய மைதானத்தில் உருக்கத்துடனும் உணர்ச்சியுடனும் நடைபெற்றது. அராஜக அடக்குமுறைக்கு எதிராக பொது மக்கள் பிற்பகல 3 மணியிலிருந்தே திரளத் தொடங்கி விட்டனர். இந்த கொலை வெறியாட்டங்களைத் தட்டிக் கேட்க எவருமே கிடையாதா என்ற மனப் புழுக்கத்தில் ஏங்கிக் கொண்டிருந்த பொது மக்களின் உணர்வுகளுக்கு நம்பிக்கையூட்டுவதாக இந்தக் கூட்டம் இருந்தது.

அச்சத்தின் பிடியில் உறைந்து கிடந்த ஏழை எளிய மக்கள் அச்சத்தை உதறி எறிந்துவிட்டு ஆவேசத் துடன் திரண்டு நின்றதைப் பார்க்க முடிந்தது. இராயக்கோட்டைப் பேருந்து மைதானம் முழுவதும் மக்கள் தலையாகவே காட்சியளித்தது. முன்புறம் போடப்பட்டிருந்த இருக்கைகள் முழுமையாக நிரம்பி இருபுறங்களிலும் அடர்த்தியாக கடும் நெரிசலில் மக்கள் நின்று கொண்டு கருத்தினைக் கேட்டனர். கூட்டத்தின் இடையே மழை கொட்டத் தொடங்கியது. மக்கள் அப்படியே பேருந்து நிலையத்துக்குள் சென்று உரைகளைக் கேட்டனர். மழை நின்ற பிறகு அவர்களே முன் வந்து இருக்கை யில் அமர்ந்தனர். தளி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அவரது அடியாட்கள் கூட்டத்தின் கொலை வெறி யாட்டங்களையும் நில அபகரிப்புகளையும் பேசிய தோழர்கள் ஒவ்வொருவரும் அம்பலப் படுத்திய போது அந்தக் கூட்டம் பலத்த கரவொலி எழுப்பி ஆரவாரித்து அந்த உண்மைகளை அங்கீகரித்தது.

மாவட்ட தலைவர் தி.குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பிரேம்குமார், கெலமங்கலம் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழக மக்கள் உரிமைக் கழகம் வழக்கறிஞர் புகழேந்தி, தலித் விடுதலைக் கட்சி செங்கோட்டை யன், அயோத்திதாசர் ஆய்வு மையம் ச.இராம லிங்கம், சி.பி.ஐ.எம்.எல். (மக்கள் விடுதலை) மீ.தா. பாண்டியன், தமிழக மக்கள் புரட்சி கழக பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன், தமிழக மக்கள் ஜனநாயக கூட்டமைப்பு குணா, சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி வழக்கறிஞர் ரஜனிகாந்த், மே 17 இயக்கம் திருமுருகன், மக்கள் ஜனநாயக இளைஞர் இயக்கம் தமிழ்வாணன், சி.பி.ஐ. (எம்.எல்.) விந்தை வேந்தன், தமிழ் தேசிய விடுதலை இயக்கம் மு.மோகன் ராஜ், பெ.தி.க. வழக்கறிஞர் சு.குமாரதேவன், விடுதலை சிறுத்தைகள் பொ.மு.நந்தன், பெங்களூர் கலைச் செல்வி, தமிழக மக்கள் விடுதலை முன்னணி இரா.தமிழரசன், மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் க.ம.இளவரசன், காஞ்சி மக்கள் மன்றம் மகேசு, புரட்சிகர தொழிலாளர் முன்னணி மணிவாசகம், சேவ் தமிழ் செந்தில், தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சி இரா.சு.நடவரசன், தமிழ்நாடு மக்கள் பேராயம் குமணன், பெ.தி.க. தர்மபுரி மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

இந்தக் கூட்டத்திற்கு பார்வையாளராக வந்திருந்த லக்ஷ்மணய்யா என்பவர், “நான் எம்.எல்.ஏ. இராமச் சந்திரனால் 36 ஏக்கர் நிலத்தை பறிகொடுத்தவன். எனவே அவருடைய அக்கிரமத்தைப் பற்றி சில நிமிடம் பேச எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்” என்று தாமாக முன் வந்து மேடையேறி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். தனது தாய்மொழியான தெலுங்கு மொழியிலேயே பேசிய அவர், தனக்கோ தனது குடும்பத்துக்கோ தெரியாமலேயே தமக்கு சொந்தமான நிலம் அபகரிக்கப்பட்டிருந்ததை பத்திரப் பதிவு அலுவலகம் சென்ற பிறகே தெரிய வந்தது என்று கூறினார். இந்த உண்மையை உங்களிடம் தெரிவித்து விட்டதால் எனக்கு எது வேண்டுமானாலும் நேரலாம் என்ற அச்சத்தை வெளிப்படுத்திய அவர், அதற்கு தயாராகவே வந்துள்ளதாகக் கூறியபோது கூட்டம் உணர்ச்சி மயமானது.

கூட்டத்தில் பேசிய கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், “தொகுதி தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் சுகவனம் பேச வந்தபோது இதே கும்பலால் தாக்கப்பட்டார். தி.மு.க. சட்டமன்ற உறப்பினர் செங்குட்டுவன் பேச வந்த போதும் தாக்குதலுக்கு உள்ளானார். ஆளுங் கட்சியான அ.இ.அ.தி.மு.க.வில் நாகராஜரெட்டி இருந்தாலும் எம்.எல்.ஏ. தளி இராமச்சந்திரன் ஆட்களால் இரண்டு முறை கொலை முயற்சி தாக்குதலுக்கு உள்ளாகி, உயிர்தப்பி இப்போதும் நடமாட முடியாத நிலையில் உள்ளார். இவ்வளவுக்குப் பிறகும் காவல்துறையின் ஆதரவோடு மகாராசாவைப் போல் வலம் வந்து கொண்டிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரனும் அவரது அடியாள் கூட்டமும் பெரியார் திராவிடர் கழகத்தோழர் பழனி மீது கை வைத்த பிறகு தான் இப்போது அம்பலப் பட்டு அச்சத்தின் பிடியில் தலைமறைவாக திரி கிறார்கள். தமிழக வரலாற்றிலேயே ஒரு சட்டமன்ற உறுப்பினர் கொலை வழக்கில் தேடப்பட்டு தலைமறைவாகி இருப்பது இதுவே முதல் முறை என்று ஊடகங்கள் கூறுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது அந்த இயக்கத்தின் போராளிகள் தலைமறை வானார்கள். அப்போது அவர்களுக்கு அடைக்கலம்

(4 ஆம் பக்கம்)

# தமிழக அரசே; குற்றவாளிகளை தப்பவிடாதே!

# தோழர் பழனிக்கு தமிழகம் முழுதும் வீரவணக்கப் பேரணிகள்

## சென்னை



வீரமரணம் அடைந்த பழனிச்சாமி வீர வணக்கப் பேரணி சென்னையில் 14.7.2012 மாலை 4 மணியளவில் மயிலாப்பூர் கழகத் தலைமை அலுவலகத்திலிருந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் புறப்பட்டது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் முன்னிலை வகித்தார். வீர வணக்க முழக்கங்களுடன் பேரணி மயிலாப்பூர் டாக்டர் நடேசன் சாலை - அய்ஸ் அவுஸ் - வி.எம். சாலை வழியாக இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தை வந்தடைந்தது. ஒரு மணி நேரம் நடந்த இந்தப் பேரணியை வீதியின் இருபுறமும் மக்கள் திரண்டு பார்த்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேரணியில் பங்கேற்றார். இராயப்பேட்டை கழக அலுவலகமான பெரியார் படிப்பகம் அருகில் வீரவணக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 'சேவ் தமிழ்' அமைப்பைச் சார்ந்த செந்தில், திருமுருகன் (மே 17 இயக்கம்), எஸ்.எஸ்.பாலாஜி (விடுதலை சிறுத்தைகள்), வழக்கறிஞர் குமாரதேவன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் கண்டன உரையாற்றினர். தென் சென்னை மாவட்ட தலைவர் தபசி. குமரன், வட சென்னை மாவட்ட தலைவர் கேசவன் முன்னிலை வகித்தனர். ஏராளமான கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## குமாரபாளையம்




தோழர் பழனி படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் அவருக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையிலும் குமாரபாளையம் ஆனங்கூர் பிரிவிலிருந்து பேருந்து நிலையம் வரை வீர வணக்க ஊர்வலம் நாமக்கல் மாவட்ட கழகத்தின் சார்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் மு.சாமிநாதன் தலைமை தாங்கினார். கேப்டன் அண்ணாதுரை முன்னிலை வகித்தார். தமிழ் தேசிய விடுதலை இயக்க ஆறுமுகம், இலக்கிய தளம் அமைப்பு அன்பழகன், மக்கள் சிவில் உரிமை கழகம் பகலவன் ஆகியோர் வீர வணக்க உரையாற்றினர். இறுதியாக திருச்செங்கோடு நகர தோழர் சி.சிவகுமார் நன்றி உரையாற்றினார்.

## திண்டுக்கல்




கிருஷ்ணகிரி மாவட்ட கழக அமைப்பாளர் பழனியின் வீர வணக்க நிகழ்ச்சி, திண்டுக்கல்லில் 14.7.2012 சனி மாலை 5 மணிக்கு மணிக் கூண்டு அருகில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் துரை சம்பத் தலைமையில், மாவட்ட செயலாளர் க.சூ.ரவணா முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் பங்கேற்று கண்டன உரையாற்றிய தோழர்கள் கு.செ. வீரப்பன் (தமிழர் தேசிய இயக்க மாவட்ட தலைவர்), பா.பாஸ்கரன் (பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட செயலாளர்), சூ.ச.மனோகரன் (தலித் போராளிகள் முன்னணி), க.பாண்டியன் (புரட்சிகர இளைஞர் முன்னணி) மற்றும் பழனி நகர தோழர்கள் பழனிச்சாமி, துரைச்சாமி, திண்டுக்கல் நகர தலைவர் சுப்ரமணி, நகர பொறுப்பாளர் ந. கலைச்செல்வன் ஆகியோர் பேசினர். ப. கோபி நன்றி கூறினார்.

## கள்ளக்குறிச்சி




பழனிச்சாமி அவர்களுக்கு வீரவணக்கம் நினைவேந்தல் பேரணி விழுப்புரம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 14.7.2012 அன்று மாலை 3 மணியளவில் கள்ளக்குறிச்சி, மந்தைவெளி பெரியார் சிலை அருகில் புறப்பட்டு அம்பேத்கர் சிலை அருகில் நிறைவடைந்தது. பேரணியில் பழனிச் சாமிக்கு வீரவணக்கம் செலுத்தியும், தளி தொகுதி சி.பி.அய். சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரனை உடனடியாக கைது செய்யக் கோரியும் தோழர்கள் முழக்கமிட்டனர். நிறைவாக தோழர்கள் ச.பெரியார் வெங்கட், திருமால், ச. இராமர், பா.கண்ணன், இராமலிங்கம் (விவசாய விடுதலை முன்னணி), சங்கை ரவி (மனித உரிமை அமைப்பு), மும்பை கதிரவன், ந. அய்யனார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். நிகழ்விற்கு ந. வெற்றிவேல் தலைமை தாங்கினார். சி.ஆசைத்தம்பி, கல்லை சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர்கள் ச.க. இளையராஜா, செ.நாவாப்பிள்ளை, செ.பிரபு, சு.தினகரன், பெ.கோவிந்தன், முருகன் உள்பட ஏராளமானோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

## சேலம்



வீரவணக்கப் பேரணி, சேலம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 14.7.2012 அன்று சனிக் கிழமை மாலை 6 மணிக்கு சேலம் கோட்டை மைதானத்தில் துவங்கி, பழைய பேருந்து நிலையம் வரை இடைவிடாத ஒலி முழக்கங்களோடு நடைபெற்றது. இந்த ஊர்வலத்திற்கு மேற்கு மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் தலைமையேற்றார். கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல் முன்னிலை வகித்தார். ஊர்வலத்தின் முடிவில் பழைய பேருந்து நிலையத்தில் வீரவணக்க உரை ஆற்றப்பட்டது. சேலம் மக்கள் குழு லட்சுமி பிரியா, ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி வின்செண்ட், சி.பி.ஐ.எம்.எல். (மக்கள் விடுதலை) மணிமாறன், சி.பி.ஐ.எம்.எல். கோ. சீனிவாசன், தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் பூமொழி, கழக மாவட்ட அமைப்பாளர்கள் டைகர் பாலன், நங்கவள்ளி அன்பு ஆகியோர் உரையாற்றினர்.

மாவட்ட அமைப்பாளர்கள் அண்ணாதுரை, முத்து மாணிக்கம், மாவட்ட செயலாளர் சூரிய குமார், துணைத் தலைவர் பெருமாள், துணைச் செயலாளர் மகேந்திரன், மாநகர அமைப்பாளர் தங்கராசு, செயலாளர் சரவணன், மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்கள் சவுந்தரராசன், கிருஷ்ணன் உள்ளிட்ட கழகத் தோழர்களும், தோழமை அமைப்புத் தோழர்களும் சேர்ந்து சுமார் 100 பேர் கலந்து கொண்டனர்.

## புதுவை



புதுவை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 14.7.2012 அன்று மாலை 6 மணியளவில் புதுச்சேரி பிள்ளைத் தோட்டம், பெரியார் சிலை அருகில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. வீரவணக்க நிகழ்வுக்குப் புதுவை மாநில கழக அமைப்பாளர் இர.தந்தைப் பிரியன் தலைமை தாங்கினார். புதுவைக் கழகச் செயலாளர் விசயசங்கர், தோழமை அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள், பெரியார் தி.க. தோழர்கள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். கழகத் துணைத் தலைவர் இரா. வீராசாமி நன்றியுரையாற்றினார்.

## தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட கழகம் சார்பாக கோவில்பட்டி கிருஷ்ணன் கோவில் திடலில் மாலை 5 மணியளவில் தோழர் பழனிச்சாமிக்கு வீர வணக்க நிகழ்வு, மாவட்ட தலைவர் அன்புரோசு தலைமையில் நடைபெற்றது. கோவில்பட்டி நகர பொறுப்பாளர் சிங் கண்ணன் முன்னிலை வகித்தார். ஆதித் தமிழர் பேரவை சூரியன் துவக்க உரையாற்றினார். தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் விளக்க உரையாற்றினார். மாவட்ட செயலாளர் கோ.அ.குமார், பொருளாளர் மதன், தூத்துக்குடி நகர செயலாளர் பால் அறிவழகன், அமிர்தராசு, கனகராஜி உள்ளிட்ட சுமார் 50 தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்ட கழகம் சார்பாக மாலை 5 மணிக்கு வீர வணக்க ஊர்வலம் பெரியார் சிலையிலிருந்து துவங்கி, புதிய பேருந்து நிலையம் வரை நடைபெற்றது. இந்த ஊர்வலத்திற்கு மாவட்ட தலைவர் துரை. தாமோதரன் தலைமையேற்றார். ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் செ.துரைராஜ், பெரியார் தொண்டர் அக்ரி. ஆறுமுகம், அசேன் முகமது, விடுதலை சிறுத்தைகள் கட்சி பெ.ரா. முருகையன், த.மு.மு.க. நகர செயலாளர் மகம்மது ஹனீபா, சித்தார்த்தன், செயவர்த்னே ஆகியோர் வீர வணக்க உரை ஆற்றினர். கலந்துகொண்ட அனைவரும் ராமச்சந்திரனின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை நீக்கம் செய்து கைது செய்ய வலியுறுத்திப் பேசினர். அம்மாபாளையம் ரஞ்சித்குமார், பாலா, பாடாலூர் சுதாகர், பெரம்பலூர் ராஜேஷ்குமார், கற்பனைப் பித்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு

தோழர் பழனிக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு ஈரோட்டில் தந்தை பெரியார் சிலைக்கு முன்பு 14.7.2012 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வுக்கு மாவட்ட தலைவர் நாத்திகசோதி தலைமை தாங்கினார். தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் ப.இரத்தினசாமி, தமிழ் தேச விடுதுலை இயக்க பொதுச் செயலாளர் மோகன்ராசு, பகுத்தறிவாளர் பேரவை ஒருங்கிணைப்பாளர் ப.சிவக்குமார், நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர் ஜபருல்லா, விசயசங்கர், சென்னிமலை செல்வராசு, முத்தூர்

(4 ஆம் பக்கம்)

### புள்ளி விவரங்களுடன் வழக்கறிஞர் துரைசாமி விளக்கம்:

# வரலாற்றுப் போக்கை மாற்றியமைத்த திராவிடர் இயக்கம்

***திராவிடர் இயக்கம் வந்த பிறகு தான் தமிழன் தலைநிமிர்ந்தான்; தன்மானம் பெற்றான் என்று வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, வரலாறுகளை சுட்டிக்காட்டி உரையாற்றினார். 24.3.2012 அன்று பெரம்பூர் ராஜலட்சுமி அரங்கில் 'குடிஅரசு' வாசகர் வட்ட தொடக்க விழாவில் அவர் ஆற்றிய உரையின் தொடர்ச்சி:***

1925 ஆம் ஆண்டு பெரியார் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியே வந்தார்.

இவ்வியக்கம் ஆரம்ப காலத்தில் நம் நிலை எப்படி இருந்தது? ஹிட்லர், ஜெர்மன், யூதர்களிடம் கொண்டுள்ள மனப்பான்மைக்குக் காரணங்கள் என்னவென்று அவர் சொல்லுகின்றாரோ, அவைகளும், அவைகளுக்கு மேற்பட்ட காரணங்களுமே இங்கே நம் மாபெருந்தலைவர்கள் இவ்வியக்கத்தை ஆரம்பிப்பதற்குக் காரணங்களாயிருந்தன.

**கல்வி**

1915 ஆம் ஆண்டில், நம் இயக்கம் ஆரம்பிக்கப்படு முன் கல்வித் துறையில் பார்ப்பனரல்லாத மக்கள் எந்நிலையிலிருந்தார்கள் என்பதைச் சிறிது கவனிப்போம்.

கல்வித் துறை நிர்வாகத்தில் மொத்தம் 518 பதவிகளில் 400 பதவிகள் பார்ப்பனர்கள் கையிலிருந்தன. 73 பதவிகளை ஆங்கிலே இந்தியர்கள், யூரேஷியர்கள், கிறிஸ்தவர் இம்மூன்று வகுப்பினரும் 28 பதவிகளை முஸ்லீம்களும் வகித்து வந்தனர். வகுப்புவாதம் பேசுவதாகச் சொல்லப்படும் நமக்கு, அதாவது பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களுக்கு 18 உபபதவிகளே இருந்தன. 400 எங்கே? 18 எங்கே?

ஜெர்மனியில் அப்பொழுது யூதர்கள் நம் நாட்டுச் சிறு கூட்டத்தாரைப்போல இவ்வளவு அதிகப்படியான பதவிகளைக் கைபற்றி இருந்திருப்பார்களா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

நம் இயக்கம் தோன்றிய காலத்தில் இந்நாட்டில் 100-க்கு 7 பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அந்த எழுதப் படிக்கத் தெரிந்த மக்களில் 100-க்கு 90 பேருக்கு மேல் பார்ப்பனர்களே. படித்த இந்தியரில் பார்ப்பனரல்லாத இந்துக்கள் தொகை 100-க்கு 5-க்கு மேல் இருந்திருக்க முடியாது. நூற்றுக்கு தொண்ணூறு எங்கே? அய்ந்தெங்கே?

ஆனால், கல்வித் திறமையிலோ பார்ப்பனரல்லாத மாணவர்கள் பார்ப்பன மாணவர்களுக்கு சளைக்காமலே இருந்து வந்திருக்கின்றார்கள்.

1915 ஆம் வருடத்திய சென்னைப் பல்கலைக்கழக அறிக்கைப்படி 1914 ஆம் ஆண்டில் இன்டர்மீடியட் தேர்வுக்கு அனுப்பப்பட்ட 1900 பார்ப்பனப் பிள்ளைகளில் 775 பேர் தேறியிருக்கின்றார்கள். பி.ஏ. தேர்வில் ஆங்கிலப் பாடத்தில் 469 பார்ப்பனப் பிள்ளைகளில் 210 பேர் தேறியிருந்தால், 133 பார்ப்பனரல்லாத இந்து மாணவர்களில் 60 பேர் தேறியிருக்கின்றனர்.

பி.ஏ. விஞ்ஞான தேர்வில் 442 பார்ப்பனப் பிள்ளைகளில் 159 பேர் தேறியிருந்தால் பார்ப்பனரல்லாத இந்து பிள்ளைகளில் 107-க்கு 49 பேர்கள் தேறியிருக்கிறார்கள். பி.ஏ. (புதிது) முதல் பகுதியில் (பார்ட் 1) 460-க்கு 270 பார்ப்பனப் பிள்ளைகளும், 108-க்கு 64 நம் சமூகப் பிள்ளைகளும் தேறியிருக்கின்றனர். இரண்டாவது பகுதியில் (பார்ட் 2), 426 பார்ப்பனப் பிள்ளைகளில் 203 பேரும், 117 பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு 63 பேரும் தேறியிருக்கிறார்கள்.

எம்.ஏ. தேர்வுக்கு அனுப்பப்பட்ட 157 பார்ப்பனப் பிள்ளைகளுள் 67 பேரும், பார்ப்பனரல்லாத 20 மாணவர்களில் 9 பேரும் தேறியிருக்கின்றனர்.

பி.ஏ., எல்.டி. என்ற ஆசிரியர் படிப்புக்குச் சென்ற 104 பார்ப்பனப் பிள்ளைகளில் 65 பேர் தேறியிருந்தால் நமது சமூக மாணவர்கள் 11 பேரில் 10 பேர் தேறியிருக்கிறார்கள்.

தேர்வுத்தாள் திருத்துபவர்கள் எல்லோரும் அநேகமாக பார்ப்பனர்களாகவே இருந்தும், கல்வித் துறை அவர்கள் கையிலிருந்தும் நம் மாணவர்கள் பார்ப்பன மாணவர்களுக்கு மேலாகவே அந்த தேர்வுகளில் தேறியிருப்பது கவனிக்கத்தக்கது.

பார்ப்பனப் பிள்ளைகள் 100 பேர் ஒரு தேர்வுக்கு அனுப்பப்பட்டால் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் அதில் 4 இல் ஒரு பங்குக்குக் குறைவாகவும், சில தேர்வுகளுக்கு 100-க்கு 10 விகிதத்துக்குக்கூட குறைவாகவுமே தான் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள்.

**பதவிகள்**

1916 ஆம் ஆண்டில் "புரொவின்ஷியல் சிவில் சர்வீஸ்" என்னும் உயர்தர நிர்வாக பதவியில் மக்கள் தொகையில் 100க்கு 3 பேர் எண்ணிக்கைக் கொண்ட பார்ப்பனர்களில் 100 பதவிகளில் இருந்திருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் அப்பதவியில் இருந்த பார்ப்பனரல்லாதவர்கள் 29 பேரே ஆவார்கள்.

நீதித் துறையில் 190 பார்ப்பனர்கள் பதவி வகித்திருக்கிறார்கள். பார்ப்பனரல்லாதவர்களில் 39 பேர்தான் பதவி வகித்து இருந்தார்கள்.

திராவிட இயக்கத்தினால் ஏற்பட்ட மறுமலர்ச்சி என்ன?

தமிழன் தாழ்த்தப்பட்ட நிலை மாறி அரசியல் - பொருளாதாரம் - கல்வி - சமுதாயம் ஆகிய எல்லாவற்றிலும் முன்னேற்றம் காண முடிந்தது.

திராவிட இயக்கம் தோன்று முன்:

1. கல்வி மறுக்கப்பட்டது
2. அரசு பதவி கிடையாது
3. சமூக அந்தஸ்து கிடையாது
4. பொருளாதார வசதி கிடையாது
5. மொழி உரிமை கிடையாது

1. 1916க்கு முன் சட்டசபையில் தமிழனுக்கு இடமில்லை
2. கல்லூரிகளில் இடமில்லை.
3. நிர்வாகத் துறை முழுக்க பார்ப்பன மயம்
4. நீதித் துறையில் பார்ப்பனரல்லாதாருக்கு இடம் கிடையாது
5. காவல் துறையில் பெரிய பதவிகள் எல்லாம் பார்ப்பனர் கையில். எடுபிடி வேலைகள் மட்டும் தமிழன் கையில்.
6. தொழிற்துறையும் பார்ப்பனர் ஆதிக்கத்தில்.

50 ஆண்டுகாலப் போராட்டத்தில் பார்ப்பனர் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. மேல் ஜாதி ஆணவம் அழிந்த. தனி மனிதனின் உரிமை, மொழி உரிமை காப்பாற்றப்பட்டது.

1921 ஆம் ஆண்டு டாக்டர் நடேசனின் தீர்மானப் படி தலைமை செயலகத்தில் 100க்கு 100 பார்ப்பனர் மயமாக இருந்தது. இன்று ஐ.ஏ.எஸ். பதவிகளைத் தவிர 100க்கு 90 பேர் தமிழர்கள். நீதித் துறையில் 53 பேர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகளில் 3 பேர் மட்டுமே பார்ப்பனர்.

இதுதான் வரலாற்றுத் திருப்பம்!

1960 ஆம் ஆண்டு 12 பேர் மட்டுமே இருந்த உயர்நீதிமன்ற நீதிபதிகளில் 10 பேர் பார்ப்பனர். அதாவது 90 சதவீதம்.

அதேபோல் தான் மருத்துவத் துறையில் சமஸ்கிருதம் படித்தவன் மட்டுமே டாக்டர் ஆகக் கூடும் என்ற நிலை மாறி இன்று மருத்துவத் துறையில் முழு ஆதிக்கமும் தமிழர்களே.

திராவிடர் இயக்கம் - சமூகத்தைப் புரட்டி போட்டது என்பது வரலாறு. இந்த உண்மைகளை மறைத்துவிட்டு திரிபுவாதம் பேசுவோரை வரலாறு மன்னிக்காது. **(நிறைவு)**

## பொது நலனை சிதைக்கும் 'மனு சாஸ்திரம்'

'பிராமணர்களுக்கு மட்டும்' என்று அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வெளிப்படையாக விளம்பரங்களே வருவதை ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம். அதை வெளியிட்ட 'இந்து' ஏட்டின் மீது, பத்திரிகைக் குழுவுக்கு சென்னை மருத்துவர் இனியன் இளங்கோ புகார் கூறியதன் அடிப்படையில், 'இந்து' அந்த விளம்பரத்தை வெளியிட்டதற்கு வருத்தம் தெரிவித்திருந்தது. இதைத் தொடர்ந்து, 'இந்து' நாளேடு (ஜூலை8, 2012) டெல்லி, பெங்களூர், மும்பை போன்ற பெரு நகரங்களில் வாடகைக்கு வீடுகளை விடுவதில் 'இனப் பாகுபாடு' காட்டப்படுகிறது என்ற விரிவான கட்டுரையை வெளியிட்டுள்ளது. குறிப்பாக தலைநகரமான டெல்லியில் முஸ்லீம்கள் என்றாலே, அவர்களுக்கு வீடு வாடகைக்கு தரப்படுவதில்லை. நகரின் ஒதுக்குப்புறத்தில் முஸ்லீம்கள் வாழும் நெருக்கடியான பகுதிகளுக்குள்ளேயே தள்ளப்படுகிறார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

சென்னையில் முஸ்லீம்களுக்கும், 'தலித்' களுக்கும் இதே நிலைதான். 'சைவமா? அசைவமா?', அசைவக்காரர்களுக்கு வீடு இல்லை என்று கூறிவிடுகிறார்கள். மாமிச உணவு சமைக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் வாடகைக்கு விடப்படும் நிலையும் உண்டு. உணவு முறையில் புகுத்தப்பட்ட 'மனுதர்மம்' வாழ்க்கையில் மட்டுமல்ல; வாடகைக்கு வீடு கிடைப்பதிலும்கூட விட்டு வைக்காமல், துரத்தி துரத்தி அடிக்கிறது.

இப்படி வீடுகளில் காட்டப்படும் 'இன வெறுப்பை'க் கண்டித்து, ஏராளமான வாசகர்கள் கடிதங்களையும் அதே ஏட்டில் (ஜூலை 9) எழுதியுள்ளார்கள். இத்தகைய 'சாதி-மத ஒதுக்குதல்' காரணமாகவே விரக்தியுற்ற இளைஞர்கள் கிரிமினல் குற்ற செயல்களை நோக்கித் தள்ளப்படுகிறார்கள் என்றும், கல்வி பரவினாலும், இத்தகைய 'ஒதுக்குதல்' மனப்பான்மை மாறவில்லை என்றும், 'மூதாதையர் பின்பற்றியதுதான் இந்த ஒதுக்கி வைத்தல்' என்று நியாயப்படுத்தப்படுகிறது என்றும், இந்தக் கடிதங்களில் கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

'சகிப்புத்தன்மையும்-அரவணைப்பும்' நிறைந்த இந்து மதத்தில் இத்தகைய போக்கு நிகழக் கூடாது என்று 'இந்து மதப் பெருமை'யையும் விட்டுக் கொடுக்காமல், சில கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. ஒரு கடிதமாவது – 'மனு' என்ற மாபாதகன் விதைத்த – சீரழித்த – பார்ப்பனிய சிந்தனையின் விளைவுதான் என்று பிரச்சினையின் மய்யத்தை சுட்டிக்காட்டவில்லை.

இதே ஏட்டில், இதே நாளில் (ஜூலை 9) தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வரும் இந்தி திரைப்பட நடிகர் அமீர்கான், தீண்டாமை பற்றிய தனது கருத்துகளை பதிவு செய்துள்ளார். அதில், இந்தியாவில் தீண்டாமை நீடிக்கும் வரை வல்லரசு கனவு நிச்சயமாக பலிக்காது என்று கூறியுள்ளார். சமூக ஒற்றுமையையே 'தீண்டாமை' சிதைத்து விடுவதால் தான், சமூகமே ஒட்டாமல் நொறுக்கப்பட்டுக் கிடப்பதால்தான், பொதுச் சொத்துகளும், பொது சுகாதார அமைப்புகளும் நாசமாகின்றன. அனைவருக்கும் பொதுவானவை என்ற பொது சிந்தனையே மழுங்கடிக்கப்படுகிறது சாதி தீண்டாமை சமூகத்தின் பொது ஒழுக்கத்தை பொது நலச் சிந்தனையையே குலைத்து விடுகிறது என்று படம் பிடித்துள்ளார்.

இன்னமும் மனிதன் மலத்தை மனிதன் எடுக்கும் அவலம் தொடர்வதையும் சுட்டிக்காட்டியுள்ள அவர், பகிர்ந்து வாழும் சமூகப் பொது நலனுக்கு எதிரான 'தீண்டாமை' நீடிக்கும் வரை இந்தியா வல்லரசாக முடியாது என்று உறுதியாக கூறுகிறார்.

மனுதர்ம ஒழிப்பு என்பதில் சமூக வேறுபாடுகள் மட்டுமல்ல, ஒரு தேசத்தின் பொதுமையும் பொதுநலப் பார்வையும் ஏன், சர்வதேச அரசியலும்கூட அடங்கியிருக்கிறது என்ற ஆழமான புரிதலுக்கு நாம் வந்தாக வேண்டும்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தளி இராமச்சந்திரன் அபகரித்த நிலங்களை மீட்டுத் தருவோம்!



(முதல் பக்கத் தொடர்ச்சி)

தந்தது பெரியார் இயக்கத் தோழர்கள். அதற்கு நன்றி தெரிவித்து மறைந்த பொதுவுடைமை இயக்கத் தலைவர் தோழர் எம்.கல்யாணசுந்தரம் கழகத்துக்கு கடிதமே எழுதினார். "கொள்கைக்காக தலை மறைவை மேற்கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி இருந்த காலம் மாறி, இப்போது கொலைக் குற்றத்துக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள இந்திய கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ. தலைமறைவாக இருப்பதும், அதை அக்கட்சி நியாயப்படுத்துவதும், உண்மையிலே அக்கட்சிக்கு ஏற்பட்ட கொள்கைச் சரிவு. இதற்காக வேதனைப்படுகிறோம். தலைமறைவாகத் திரியும் குற்றவாளிகள் கூண்டில் ஏற்றப்படும் வரை பெரியார் திராவிடர் கழகம் இதைவிடப் போவதில்லை. தமிழகம் முழுதும் இதற்கான இயக்கங்களை நடத்துவோம்" என்று குறிப்பிட்டார்.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையில், 2 ஆண்டுகளாக பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து செயல்பட்ட தோழர் பழனி மீது எம்.எல்.ஏ. ராமச்சந்திரன் கும்பலுக்கு ஆத்திரம் வந்ததற்கான காரணங்களை விளக்கினார். தங்களைத் தவிர வேறு எந்த அமைப்பும் தங்கள் பகுதியில் செயல் படக் கூடாது என்று தளி சட்டமன்ற உறுப்பினரும், அவரது அண்ணனும் அவர்களின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கும்பலும் செயல்பட்டனர். தங்கள் தொகுதிக்குள் வந்த தி.மு.க. நாடாளுமன்ற சட்டமன்ற உறுப் பினர்கள்கூட தாக்கப் பட்டனர். தோழர் பழனி அப்பகுதியில் பெரியார் திராவிடர் கழகத்தை நோக்கி இளைஞர்களை திரட்டினார். நாகமங்கலம் பஞ் சாயத்து தலைவர் தேர்தலில் எம்.எல்.ஏ. இராமச் சந்திரனின் மாமா மனைவி வனிதா போட்டியிட்ட போது அவரை எதிர்த்து தி.மு.க., அ.தி.மு.க.வினரே போட்டியிட அஞ்சினார்கள். ஆனால் கழகத் தோழர் மாருதி, தனது தாயார் நாராயணம்மாளை போட்டியிட வைத்தார். அது மட்டுமல்ல, தேர்தலை கள்ள ஓட்டுகள் போடாமல் நேர்மையாக நடத்த முயன்றார். அந்தத் தேர்தலில் நாராயணம்மாள் 130 வாக்குகளில் தோல்வி அடைந் தாலும் தங்களது வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடும் துணிச்சல் வந்து விட்டதா என்று ஆத்திரப்பட்டார்கள். அதற்காக சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி இருந்தார்கள்.

நீலகிரி வரதராஜசாமி கோயில் திருவிழாவில், தனது தாயாரை போட்டியிட வைத்த கழகத் தோழர் மாருதியின் சித்தப்பா அன்னையப்பாவை, எம்.எல்.ஏ. ஆட்கள் வம்புக்கிழுத்து மோதலை உருவாக்கி தேர்தலில் எதிர்த்து போட்டியிட்ட நாராயணம்மாள் வீட்டுக்குள் நுழைந்து அவரது கணவரையும் 3 மகன்களையும் எலும்பு முறியும் அளவுக்கு தாக்கினார்கள். சிகிச்சைக்காக ஓசூர் மருத்துவமனையிலே அவர்கள் சேர்க்கப்பட்டபோது நள்ளிரவிலே சட்டமன்ற உறுப்பினரே தனது அண்ணன் - அடியாட்களுடன் மருத்துவமனைக்குள்ளேயே நுழைந்து சிகிச்சைப் பெற்று வந்த தோழர்களையே மூர்க்கத்தனமாகத் தாக்கினர். உத்தனப்பள்ளி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தங்களை நேரில் வந்து தாக்கியது சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரனும் அவரது ஆட்களும் தான் என்று அடிப்பட்ட தோழர்கள் வாக்கு மூலம் தந்தும், காவல்துறை அவர் பெயரை பதிவு செய்யவில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு தமிழ் எழுதவோ படிக்கவோ தெரியாது. அதை காவல்துறை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இராமச்சந்திரன் பெயரை புகாரில் சேர்க்காமலே தவிர்த்து வருகிறது.

2010 அக்டோபரில் திருச்சியில் தீண்டாமை சுவரை இடிக்கும் போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்தியபோது இந்தப் பகுதியி லிருந்து இரண்டு வேன்களில் தோழர்கள் கலந்து கொண்டனர். பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்த பிறகு அப்பகுதி தோழர்கள் போராட்டத்தில் கலந்து கொள்வது இதுவே முதல் முறை. அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் வேறு ஒரு இயக்க நிகழ்ச்சியில் பங்கேற்க வெளியே வருவதும் இதுவே முதல்முறை. ஊர் திரும்பிய பிறகு முழு நேரமும் கறுப்புச் சட்டை அணியத் தொடங்கினர். வேறு அமைப்பு தங்கள் பகுதியில் வளரத் தொடங்கியதைப் பொறுக்க முடியாத இராமச்சந்திரன் ஆட்கள் கழகத் தோழர் களை மிரட்டி ஒருதோழரின் கருப்புச் சட்டையைப் பறித்து தீ வைத்தனர்.

இந்தப் போக்குகளைக் கண்டித்து 28.4.2012 இல் கெலமங்கலத்தில் எங்கள் கழக சார்பில் கண்டனப் பொதுக் கூட்டம் நடத்தினோம். அதில், இறுதியில் நான் பேசிய போது இராமச்சந்திரன் ஆட்களின் வன்முறை அடாவடியை எதிர்த்து 'மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு' ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தபோது, மக்கள் ஆரவாரத்துடன் கரவொலி எழுப்பி வரவேற்றனர். அதற்குப் பிறகு இராமச்சந்திரன், தா. பாண்டியன் போன்ற தலைவர்களை அழைத்து, ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சேதுராமன் என்பவர் இந்தப் பகுதியில் இரண்டு அமைப்புகள் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும், ஒன்று மார்க்சிய லெனினிய கட்சி மற்றொன்று பெரியார் திராவிடர் கழகம் என்றும், தா. பாண்டியன் முன்னிலையிலேயே பேசினார். தங்களின் வன்முறை அடாவடி நில அபகரிப்புகளை எதிர்க்கும் அமைப்புகள் வேர்விடத் தொடங்கிவிட்டதே என்ற ஆத்திரமே தோழர் பழனியை படுகொலை செய்வதற்குக் காரணம் என்று குற்றம்சாட்டுகிறோம்.

இப்போது இப்பிரச்சினை தமிழக முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. அவருடைய கவனத்துக்கு முழுமையாகப் போகவில்லையோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது.

**எனவே அடுத்த கட்டமாக தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு ஒத்த கருத்துள்ள அமைப்புகளை இணைத்து வலிமையான போராட்டத்தை அடுத்த 10 அல்லது 15 நாட்களில் நாம் நடத்த வேண்டும். இது நமது முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.**

**இரண்டாவதாக இங்கே ஏழை மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை மீட்டு, அந்த மக்களிடம் நாம் ஒப்படைக்க வேண்டும்.**

**நாம் ஏற்கனவே மக்கள் உரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு தொடங்கும் திட்டத்தை அறிவித்தோம்.**

**அந்த அமைப்பின் வழியாகவே மக்களுக்கு - இழந்த நிலங்களை மீட்டுத் தரும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.**

**தொழிலதிபர் விஜயமல்லய்யாவிடமிருந்த நிலங்களை தளி சட்டமன்ற உறுப்பினர் மீட்டு, மக்களுக்கு வழங்கியதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் புகழ் பாடுகிறார்கள்.**

**அப்படியானால் தளி இராமச்சந்திரன் மற்றும் அவரது கும்பலிலிருந்து இந்த நிலங்களை மீட்கும் நடவடிக்கைகளில் பங்கேற்க அவர்களையும் அழைப்போம்"** - என்றார் கொளத்தூர் மணி.

தளி இராமச்சந்திரனின் எல்லை மீறிய அடாவடி களுக்கு எதிராக மக்கள் சக்தி திரண்டு விட்டது என்பதை உணர்த்துவதாகவே இந்தக் கூட்டம் இருந்தது.

**– நமது செய்தியாளர்**

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதிவாணன் ஆகியோர் வீரவணக்க உரையாற்றினர். மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் தனது உரையில், பழனியின் படுகொலையில் சம்பந்தப்பட்ட தளி தொகுதி எம்.எல்.ஏ., ராமச்சந்திரனின் மக்கள் விரோதப் போக்குக் குறித்தும், அவரது அராஜகங்கள் குறித்தும் விளக்கிப் பேசினார். மேலும் பழனியின் செயல்பாடுகள் குறித்தும் நினைவு கூர்ந்தார். இப்படுகொலையில் காவல்துறையினரின் அலட்சியப் போக்கு குறித்தும், எம்.எல்.ஏ.வை இன்னமும் கைது செய்யாதது குறித்தும் தனது கண்டனத்தைப் பதிவு செய்தார்.

இந்நிகழ்வில் ஏராளமான கழகத் தோழர்கள், பகுத்தறிவாளர் பேரவைத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்க நிர்வாகிகள் திரளாக உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர்.


## நன்கொடை

திருவொற்றியூரில் தோழர் பிரபாஸ் கணினி மய்யத்தை 14.7.2012 அன்று காலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். திறப்பு விழா மகிழ்வாக உரிமையாளர் தோழர் முத்து கிருட்டிணன் கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th July 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜூலை 26, 2012 | புரட்சி 11 | முழக்கம் 28 | விலை: ரூ.2.50


## தலைமறைவு தளி சட்டமன்ற உறுப்பினர் வங்கிக் கணக்கு முடக்கம்

# அதிர்ச்சி தரும் நில மோசடி – படுகொலைகள்

தேடப்பட்டு வரும் தளி எம்.எல்.ஏ. ராமச்சந்திரன் உள்ளிட்டோர் வெளி மாநிலங்களில் பதுங்கி இருப்பதாக கூறப்படுகிறது. அவர்கள் வங்கிகள் மூலம் பண பரிவர்த்தனை எதுவும் மேற்கொண்டு விடக் கூடாது என்பதற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்ட 22 பேரின் வங்கி கணக்குகளும் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து தனிப்படை போலீஸ் அதிகாரி ஒருவர், "கொலையாளிகள், தங்களின் இருப்பிடத்தை அடிக்கடி மாற்றி வருகிறார்கள். இதனால் அவர்களை பிடிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தற்போது எங்களுக்கு சில துப்பு கிடைத்தள்ளது. அதைக் கொண்டு விசாரித்து வருகிறோம். மேலும், அவர்களின் வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டு உள்ளன. கொலையாளிகள் எங்கும் தப்பிவிட முடியாது. அவர்களை நாங்கள் நெருங்கி விட்டோம். இன்னும் ஓரிரு நாட்களில் தலைமறைவாக உள்ள கொலையாளிகள் பிடிபடுவார்கள்" என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே, இந்த கொலை தொடர்பாக தேடப்பட்டு வரும் நபர்கள் சிலர் கல்குவாரிகள் போன்ற தொழில்கள் செய்து வருகிறார்கள். அவர்களிடம் வேலை செய்யும் தொழிலாளர்கள் 115 பேர் உத்தனப்பள்ளி காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு போலீசார் அவர்களிடம் விசாரணை மேற்கொண்டனர்.

தேடப்படும் குற்றவாளிகளுடன் தனிப்படையிலுள்ள போலீசாருடன் ரகசிய தொடர்பு இருப்பதாகவும் அவர்கள் முன்கூட்டியே தரும் தகவல் காரணமாகவே தப்பி வருகின்றனர் என்றும் தோழர் பழனி கொலை நடந்த பிறகு, தலைமை காவலருடன் தேடப்படும் நபர் 40 நிமிடம் அலைபேசியில் பேசியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும், ஒரு தமிழ் நாளேடு செய்தி வெளியிட்டுளள்து. மாவட்ட காவல்துறை அதிகாரி, தற்போது மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரனைக் குற்றமற்றவர் என்று நியாயப் படுத்திவரும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சில தோழர்கள் கூற்று உண்மைக்கு மாறானது என்பதை உறுதிப்படுத்தும் சில தகவல்களை இங்கே 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது.

- சட்டமன்ற உறுப்பினர் தளி. இராமச்சந்திரனின் அண்ணன், அண்ணன் மனைவி, மாமனார், மைத்துனர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 1500 ஏக்கர் நிலத்தை ஜி.எம்.ஆர். என்ற ஆந்திர தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்துள்ளார். இதற்கான பத்திரப் பதிவு ஆதாரங்கள் இருக்கின்றன.
- தளி இராமச்சந்திரனுக்கு பூர்வீகமாக 70 ஏக்கர் நிலம் இருந்ததாகவும், அதில் கிரானைட் இருந்ததாகவும் அதைக் கொண்டுதான் தனது செல்வத்தைப் பெருக்கியதாகவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் நியாயப்படுத்துகிறார்கள். அது உண்மையல்ல. எம்.எல்.ஏ.வுக்கு சொந்தமான வெள்ளி விந்தை கிராமத்தில் அவருக்குச் சொந்தமாக இருந்தது 7 ஏக்கர் நிலம் தான். அதிலும் 'கிரானைட்' கிடையாது.

  தளி இராமச்சந்திரனை சுற்றி நிற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று கூறிக் கொள்ளும் அவர்களது ஆட்களின் கதை என்ன?

- எம்.எல்.ஏ.வின் செயலாளராக இருப்பவர் பெரியசாமி. இவரும் கம்யூனிஸ்ட் கட்சி தான். இவர் மீது முதல் மனைவியை கொலை செய்ததாக குற்றச்சாட்டு உள்ளது. கோடிக்கணக்கான டாலர்களை மோசடி செய்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்.
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக உள்ள சுந்தரேசன் குவாரி உரிமையாளர் ஒருவரது கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்.
- ஒன்றிய விவசாய அணி செயலாளராக உள்ள பாலவண்ணன் என்பவர் மீதும் கொலை வழக்கு உள்ளது.
- சட்டமன்ற உறுப்பினரின் மைத்துனர் கேசவ மூர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் சுந்தரேசன் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்.
- தளி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக இருக்கும் பெண்ணின் கணவர் கலீல். இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர். என்.சி.இராமன் கொலை வழக்கு உட்பட பல்வேறு கொலை வழக்கில் குற்றம்சாட்டப் பட்டவர்.
- அரசியலில் வன்முறை தொடர்புடையவர்கள் பற்றி விசாரணை நடத்தி அறிக்கை தந்த இந்திய அரசால் நியமிக்கப்பட்ட 'வோரா' குழு அறிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒருவர் பெயர்கூட இடம் பெறவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்நத தோழர் வீரபாண்டியன் தொலைக்காட்சி ஒன்றில் கூறினார். அவரது பார்வைக்கு மேற்கண்ட தகவல்களை சமர்ப்பிக்கிறோம்.
- தளி இராமச்சந்திரன், சுற்றி சுற்றி பொதுவுடைமை இயக்கங்களை மட்டுமே தேர்ந்தெடுத்தவர்; நல்ல கம்யூனிஸ்ட், நேர்மையானவர் என்று தோழர் வீரபாண்டியன் அதே பேட்டியில் கூறினார். 2001 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தளி தொகுதியில் ஜனதாதளமும், பா.ஜ.க.வும் போட்டியிட்டபோது, தளி இராமச்சந்திரனும் அவரது ஆட்களும் பா.ஜ.க. வேட்பாளர்களையே ஆதரித்தனர். இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்க்கப்பட்டதே ஒரு தனிக் கதை. 2006 சட்டமன்றத் தேர்தலில் தளி தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. அக் கட்சியின் மாவட்ட செயலாளராக இருந்த நாக ராஜிரெட்டி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.


அப்போது மார்க்சிஸ்ட் கட்சியில் இருந்த தளி இராமச்சந்திரன், கட்சிக் கட்டுப்பாட்டை மீறி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்டார். கூட்டணி தர்மத்துக்கு எதிராகவும், கட்சிக் கட்டுப்பாட்டை எதிர்த்தும் போட்டியிட்ட அவரை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கட்சியை விட்டு நீக்கியது. அந்த தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை தோற்கடித்து, இராமச்சந்திரன் வெற்றிப் பெற்றார். ஆனால், சொந்தக் கட்சி வேட்பாளரையே தோற்கடித்த தளி இராமச்சந்திரனையும் அவரது ஆட்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இருகரம் நீட்டி வரவேற்று, தமது கட்சியில் இணைத்துக் கொண்டது.

மனம் உடைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் நாகராஜிரெட்டி, தனது பாதுகாப்பு கருதி, அ.இ.அ.தி.மு.கவில் சேர்ந்து விட்டார். நகாராஜி ரெட்டி இரண்டு முறை கொலை முயற்சி தாக்குதலுக்கு உள்ளாகி வாய் பேச முடியாத நிலைக்கு முடக்கப்பட்டு விட்டார். தொலைக்காட்சிகளில் அவர், 'திக்கித் திக்கி' தன் மீது கொலை வெறித் தாக்குதல் நிகழ்த்திய தளி இராமச்சந்திரன் மற்றும் அவரது கும்பலைப் பற்றி இப்போது பேட்டி அளித்துள்ளார்.

கிருட்டிணகிரி மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் தோழர் பழனி, நீண்டகாலம் பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றியவர். எம்.எல்.ஏ. தளி இராமச்சந்திரனோடு மார்க்சிஸ்ட்

(4 ஆம் பக்கம்)

## மார்க்சிய லெனினிய தோழர் தொப்பி குமாரின் படுகொலை



சட்டமன்ற உறுப்பினர் தளி இராமச்சந்திரன் மற்றும் அவரது ஆட்களின் கொலைவெறியாட்டத்தைக் கண்டித்து 28.4.2012 அன்று கெலமங்கலத்தில் பெரியார் திராவிடர் கழக சார்பில் கண்டன பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூட்டத்தில் பங்கேற்று, தளி எம்.எல்.ஏ.வுக்கு எதிராக மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

இக்கூட்டத்தில் இந்திய பொதுவுடைமை கட்சி (மார்க்சிய-லெனினிஸ்ட்) அமைப்பைச் சார்ந்த தோழர்களும் பங்கேற்றனர். அடுத்த நாள் 29.4. 2012 அன்று லெனின் பிறந்த நாளுக்காக மார்க்சிய லெனினியக் கட்சி பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தது. இக்கூட்டத்துக்கு காவல் துறை வழங்கிய அனுமதியை ரத்து செய்யுமாறு ராமச்சந்திரன் வற்புறத்தவே ஏப்.28 ஆம் தேதி இரவு 10 மணிக்கு, 29 ஆம் தேதி நிகழ இருந்த கூட்டத்துக்கு காவல்துறை அனுமதி மறுத்தது. பெரியார் திராவிடர் கழகத்தை, சட்டமன்ற உறுப்பினருக்கு எதிராக இக்கட்சி தூண்டிவிடுவதாக ராமச்சந்திரனும் அவரது ஆட்களும் கருதினார்கள்.

கூட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆந்திர மாநில கூலி விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் தோழர் கோட்டய்யா, கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பேசி, மே 13 ஆம் தேதி கூட்டம் நடத்த அனுமதி பெற்றுத் தந்தார். கூட்டத்தை எப்படியும் தடுத்தே தீர வேண்டும் என்று கருதிய கும்பல், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.) செயல் வீரர் கூட்டத்துக்காக இரவு முழுதும் சுவரொட்டிகள் ஒட்டிய தோழர் தொப்பி குமாரை கூட்டத்துக்கு முதல் நாள் மே 12 ஆம் தேதி கெலமங்கலம் நடு வீதியில் வெட்டி படுகொலை செய்தனர். சுவரொட்டி ஒட்டிய கைகளை முதலில் வெட்டி வீசி வயிற்றில் குத்தினர்.

தோழர்கள் தொப்பி குமாரை ஓசூர் மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கே தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல அறிவுரை கூறினர். பிறகு பெங்களூர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தொப்பி குமார் மரணமடைந்துவிட்டார். தொப்பி குமார் உடலை தோழர்கள் எடுத்து வந்து 13 ஆம் தேதி கெலமங்கலம் வீதிகளில் வீரவணக்க ஊர்வலமாக எடுத்துச் சென்று 5.30 மணிக்கு அடக்கம் செய்துவிட்டு 6 மணிக்கு திட்டமிட்டபடி பொதுக் கூட்டத்தை நடத்தினர். தளி பகுதியில் நடந்த மற்றொரு கோர அரசியல் படுகொலை இதுவாகும். ***தொப்பி குமாருக்கு வீரவணக்கம்!***

# இராமகோபாலனே! கோயில் சொத்துகளை கொள்ளையடிப்பது யார்?

'இந்து முன்னணி' இராமகோபாலன் அய்யர் அவ்வப்போது அறநிலையத்துறைக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவார். இந்து கோயில்களை அரசின் அறநிலையத் துறை கட்டுப் படுத்தக் கூடாதாம். 'இந்து'க்களைக் கொண்ட தனி வாரியம் அமைத்து, அவர்களின் முழுக் கட்டுப் பாட்டிலேயே விட்டுவிட வேண்டுமாம். இதே போன்ற அறிக்கையை இப்போது மீண்டும் வாந்தி எடுத்துள்ளார். இந்துக் கடவுளர்கள் அரசுக் கட்டுப் பாட்டில் இருக்கக் கூடாது என்றால் அது பார்ப் பானின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டும் என்பதே 'இவாளின்' துடிப்பு! அப்படித் தான் 1927 வரை இருந்தது. கோயிலில் குவிந்து கிடந்த நிலங்களும், தங்கம், வைரம், வெள்ளி, வைடூரியங் களும் பார்ப்பனர்களால் சுருட்டப்பட்டன.

இந்த பெருச்சாளிகளிடமிருந்து மீட்பதற்கு முதல் கடிவாளம் போட்டது, நீதிக்கட்சி ஆட்சி தான். பனகல் அரசர் முதலமைச்சராக இருந்தபோது, அவர்தான் மக்கள் வழங்கிய சொத்துக்களை பார்ப்பனர்களின் கொள்ளையிலிருந்து தடுக்க அறங்காவலர்களைக் கொண்ட ஒரு வாரியத்தை உருவாக்கினார். இராமகோபாலய்யர் கதறிக் கொண்டிருக்கும் இதே போன்ற வாரியம் தான், அதற்கே அன்று "தேசிய திலகங்களான" சத்திய மூர்த்தி அய்யரும், சனாதனவாதிகளான எம்.கே. ஆச்சாரியார் போன்ற பார்ப்பனர்களும் பூமிக்கும் வானத்துக்கும் தாவி குதித்து எதிர்த்தனர். காங்கிரசிலே இருந்தாலும் நீதிக்கட்சியின் இந்த சீரிய முயற்சியை பெரியார் வெளிப்படையாகவே ஆதரித்தார். காங்கிரசிலே இருந்த சத்திய மூர்த்திகள் வெளிப்படையாக எதிர்த்தனர். கொள்கை செயல் பாடுகளை கட்சி அமைப்புகளை முன் வைத்து எதிர்ப்பது அபத்தம் என்பதே பெரியாரின் அணுகுமுறை என்பதற்கு இது ஒரு சான்று.

என்னதான் வாரியம் அமைத்தாலும், பார்ப்பனக் கும்பல் வாரியத்தையே வாரிச் சுருட்டி வாயில் போட்டுக் கொண்டது. கோயில் சொத்துக்களுக்கு குத்தகையோ வாடகையோ செலுத்தாமல், ஏலத் துக்குக் கொண்டு வந்து, அடிமாட்டு விலையில் வாங்கி சொத்துக்களை ஏகபோகமாக்கிக் கொண்டு ஏப்பம் விட்டு வந்தார்கள். இந்த சூழ்ச்சியைக் கண்டுபிடித்து தடுத்து நிறுத்த உறுதியான முடிவுக்கு வந்தவர், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி (ரெட்டியார்) தான். இத்தனைக்கும் அவர் தீவிரமான வள்ளலார் பக்தர். தனது வாழ்க்கையின் இறுதிக் காலத்தையே வடலூர் இராமலிங்க சுவாமி மடத்தில் கழித்தவர். திருவண்ணாமலை இரமண ரிஷியின் சீடர். அத்தகைய 'ஆன்மீக'த்தில் ஊறித் திளைத்த மனிதர்தான், 1951 இல் கோயில் சொத்துகளை சுரண்டும் கூட்டத்தைத் தடுக்க முதன்முறையாக வாரி யத்துக்கு பதிலாக, நேரடியாக அரசு நிர்வாகத்தின் கீழ் கோயில்களைக் கொண்டு வந்தார். அவர் கொண்டு வந்ததே இந்து அறநிலையத் துறை சட்டம்.

அப்போதும் இதே பார்ப்பனர்கள் கூக்குரலிட் டனர். இதே மிரட்டலுக்கு சட்டமன்றத்திலேயே வெள்ளை அறிக்கை ஒன்றை வைத்து பார்ப்பன கும்பலுக்கு சரியான சாட்டை அடி தந்தார். தமிழகம் முழுதும் கோயில் சொத்துக்கள் எப்படி கொள்ளை யடிக்கப்பட்டுள்ளன என்பதை புள்ளி விவரங் களுடன் அந்த அறிக்கை அம்பலப்படுத்தியது. ஒரு காலத்தில் பார்ப்பன உடைமை; பிறகு வாரிய மாக்கப்பட்ட பிறகும் பார்ப்பனக் கொள்ளை; அதற்குப் பிறகுதான் அறநிலையத் துறை சட்டமே வந்தது. இந்த நிலையில் மீண்டும் வாரியம் அமைக்கக் கோருவது, வாரிச் சுருட்டுவதற்குத் தானே?

இப்போதும் கோயில் சொத்துக்களை பார்ப்பனர்களே ஏப்பமிட்டு வருவதை இந்து அறநிலையத் துறையின் நேர்மையான அதிகாரியாக செயல்பட்ட பரஞ்சோதி என்பவர் அறநிலையத் துறை இணையத் தளத்திலே வெளியிட்டார். அதில், பார்ப்பனக் கோட்டையான மயிலை கபாலீசுவரன் கோயில் சொத்துக்களை சுருட்டிக் கொண்டிருக்கும் பார்ப்பனப் புள்ளிகளின் முகம் வெளிச்சத்துக்கு வந்தது. இதோ சில தகவல்கள்:

- மயிலாப்பூரில் பார்ப்பனப் பரப்புரை அரங்க மான 'பாரதிய வித்யா பவன்' "கபாலி" கடவுளின் சொத்து. இந்த பவனைத் தொடங்கி வைத்தது கே.எம்.முன்ஷி என்ற பார்ப்பனர். அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்ற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர். மற்றொரு முக்கிய புள்ளி குலக் கல்வித் திட்ட'ப் புகழ் இராஜகோபாலாச்சாரி, இந்த நிறுவனம் 'கபாலி'க்கு வாடகை தராமல் பாக்கி வைத்துள்ள தொகை ரூ.32 லட்சம். (வாடகைக் கூட வெறும் அற்பத் தொகைதான்)
- மற்றொன்று , 'மயிலாப்பூர் கிளப்'. 1903 இல் 3 அய்யர், 3 அய்யங்கார் மற்றும் ஒரு முதலியாரை உரிமையாளராகக் கொண்டு 'கபாலி' நிலத்தைப் பறித்து தொடங்கப்பட்ட கிளப். இப்போது இதன் தலைவர் பிரபல 'ஆன்மிகவாதியாக' அடையாளம் காட்டிக் கொள்ளும் எம்.ஏ.எம். இராமசாமி (செட்டியார்). கிளப்புக்கு உள்ளே கிரிக்கெட், டென்னிஸ் விளையாட்டு பயிற்சித் திடல், சீட்டாடும் இடம், 24 மணி நேர 'மதுக் குடி' பார், சாஸ்திரி அரங்கு - என்று எல்லாமுமே அடக்கம். இந்த 'மெய்யன்பர்கள்' கபாலிக்கு பாக்கி வைத்துள்ள தொகை ரூ.3.57 கோடி. மயிலாப்பூர் கிளப் முகப்பிலேயே அறநிலையத் துறை, "இது இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான இடம்" என்று அறிவிப்பு பலகையை நிறுவியுள்ளது.
- 'தேசியத் தலைவராக' வலம் வந்த தெலுங்கு பார்ப்பனர் நாகேசுவரராவின் 'அமிருதாஞ்சன்' தலைவலி தைல தயாரிப்பு நிறுவனம், 'கபாலி'க்கு பாக்கி வைத்துள்ளது. ரூ.6 கோடியே 45 லட்சம்.
- இதே மயிலாப்பூரில் 'கபாலி'க்கு சொந்தமான 76 கிரவுண்ட் நிலத்தை வளைத்துப் போட்ட மற்றொரு பார்ப்பனர் பெண்ணாத்தூர் சுப்ரமணிய அய்யர். 1928 இல் குத்தகைக்கு எடுத்தார். 1979 இல் குத்தகை ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. கிரவுண்ட் ஒன்று ரூ.5 கோடிக்கு விலை போகும் மயிலாப்பூரின் மய்யமான பகுதி இது. ஆனால் 76 கிரவுண்டுக்கு ஆண்டு குத்தகையாக பெண் ணாத்தூர் சுப்ரமணிய அய்யர் பள்ளி நிர்வாகம் செலுத்தும் தொகை ரூ.1250 மட்டும் தான்.
- மயிலாப்பூர் காமதேனு திரையரங்குக்கு எதிராக கபாலிக்கு சொந்தமான 25 கிரவுண்ட் நிலத்தை ஆக்கிரமித்திருப்பவர் பார்த்தசாரதி அய்யங்கார். 99 வருட குத்தகைக்கு 1901 இல் எடுத்த இந்த 'அய்யங்கார் திருமேனி' உள் குத்தகைக்கு விட்டு பணம் பண்ணினார். பலகைகள் மாறி வணிக வளாகங்களாக எழும்பி, 35 பேர் ஆக்கிரமிப்பில் உள்ளது.

அரசுக் கட்டுப்பாட்டில் அறநிலையத் துறையின் கீழ் இருக்கும்போதே இந்த நிலை என்றால், வாரியமாகிவிட்டால் கேட்கவா வேண்டும்?

தில்லை நடராசர் கோயில் தீட்சதர்கள் கட்டுப்பாட்டிலிருந்து மனித உரிமை பாதுகாப்பு மய்யமும் மக்கள் கலை இயக்கிய கழகமும் உள்ளூர் அமைப்புகளும் இணைந்து போராடி ஒரு வழியாக அறநிலையத் துறை அதிகாரி கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. தீட்சதப் பார்ப்பனர்கள் நடராசன் நகைகளைத் திருடிய வழக்கு விசாரணைக்கு வந்தபோது உயர்நீதிமன்ற நீதிபதி பிபானுமதி, 2009, பிப். 2 ஆம் தேதி ஒரு வாரத்துக்குள் அறநிலையத் துறை நடராசன் கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமிக்க உத்தரவிட்டார். 1997 ஆம் ஆண்டில் இதேபோல் அன்றைய தி.மு.க. ஆட்சி உத்தரவிட்ட போது, அரசு அறிவிப்புப் பலகையை திமிர் பிடித்த தீட்சத பார்ப்பனர்கள் உடைத்து எறிந்து, அதிகாரியை பொறுப்பேற்க விடாமல், வன்முறை யால் தடுத்தனர். அதிர்ச்சி அடைந்த அதிகாரி, குறிப்பிட்ட 3 தீட்சதப் பார்ப்பனர்களின் பெயரைக் கூறி, காவல்துறையில் புகார் கூறியும், காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை.

தில்லை நடராசன், தீட்சதப் பார்ப்பனர்களின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தபோது அங்கே நடந்த கொள்ளை, கொலைகள் ஏராளம். காணிக்கை உண்டியலைப் பங்கு போடுவதில் தீட்சதப் பார்ப் பனர்களே ஒருவருக்கொருவர் கோயிலுக்குள்ளே மோதிக் கொண்டு, அடிதடி குத்துவெட்டுகளில் இறங்கினர். உண்டியல் திருட்டுக்கு ஒரே ஒரு உதாரணம்: தீட்சதர்கள் கட்டுப்பாட்டில் 'நடராசன்' இருந்தபோது, 2007 ஆம் ஆண்டு உண்டில் வசூலாக இவர்கள் காட்டிய கணக்கு 37,199 ரூபாய் தான். அதாவது 'உலகப் புகழ் பெற்ற'தாக கூறப்படும் நடராசனுக்கு நாளொன்று உண்டியல் வருவாய் சராசரியாக ரூ.100 மட்டும்தான் என்றால் நம்ப முடிகிறதா? மரத்தடி வினாயகருக்குக்கூட உண்டியலில் ரூ400,500 என்று குவிகிறது. 'நடராசன்' அரசு கட்டுப்பாட்டுக்கு 2009 இல் வந்த பிறகு, 18 முறை உண்டியல் எண்ணப்பட்டதில் கிடைத்த தொகை 88 லட்சத்து 50 ஆயிரம். இது தவிர, வெளிநாட்டு டாலர்கள், தங்கக் காசுகள் எல்லாம் உண்டியலில் விழுந்திருந்தன. இவை எல்லாம் காலம்காலமாக தீட்சதர் பார்ப்பனக் கும்பலால் ஏப்பம் விடப்பட்டு வந்திருக்கிறது. இப்போது தீட்சதக் கும்பல் உச்சநீதிமன்றம் போயிருக்கிறது. என்ன வாதத்தை வைக்கிறார்கள் தெரியுமா?

தில்லை நடராசனும் தங்களைப் போல் தீட்சதர்களில் ஒருவர் தானாம். எனவே நடராசனின் பவுதீக சொத்துகள் எல்லாம் 'இவாள்களுக்கான' ஆன்மிக சொத்துக்களாம். இதிலே கை வைக்க அரசுக்குள்ளந்த உரிமையும் கிடையாதாம். இப்படி 'நடராசன்' கையெழுத்தைப் போட்டு பல சொத்துக்களை ஏற்கனவே விற்றிருக்கிறது இந்த தீட்சதக் கும்பல். இவர்களுக்காக வரிந்து கட்டிக் கொண்டு நீதிமன்றங்களில் வாதாடக் கிளம்பி யிருப்பவர் சோழவந்தான் பார்ப்பனரான யோக்கியர் சுப்பிரமணியசாமி.

இப்படி பார்ப்பன பெருச்சாளிகளின் சுரண்டலை நியாயப்படுத்தி தில்லையில் அரசு நிர்வாக அதிகாரியைப் போட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்த மற்றொரு புள்ளி இராமகோபாலன் அய்யர்.

அறநிலையத் துறையான அரசு கண்காணிப்பை முற்றிலும் விலக்கி விட்டு மக்கள் உழைப்பைச் சுரண்டி மன்னர்கள் கட்டிய கோயில்களை பார்ப் பனர்களின் மடப்பள்ளிகளாக்கி, அவாள்களின் குடும்பச் சொத்தாக்க வேண்டும் என்பதற்காகவே 'வாரியங்களுக்கு மாற்று' என்று வீரியத்துடன் வீதிக்கு பூணூலை உருவிக் கொண்டு வந்து நிற்கிறது, இந்த புல்லுருவிகள் கூட்டம்.

'கடவுள் பிராமணனுக்கு கட்டுப்பட்டது' என்று ரிக் வேதம் கூறுகிறது. அந்த வேதத்தை மக்களிடம் பரப்புவதற்காக எழுதி வைக்கப்பட்டதே 'மனுதர்மம்'. 2012-லும் பார்ப்பனர்கள் இந்த 'மனுதர்மத்தை' வலியுறுத்தி வருகிறார்கள். இது எதை உணர்த்துகிறது. 'மனுதர்மம்' இப்போதும் உயிர்த் துடிப்புடன் உலவிக் கொண்டிருக்கிறது என்பதைத் தானே!

**(கட்டுரைக்கான தகவல்கள் 'விணைவு' இணைய தளம்)**

## 'வருண பகவானு'க்கு பூசை போட ரூ.17 கோடியை விரயமாக்கும் கருநாடக பா.ஜ.க. ஆட்சி

*கருநாடக பா.ஜ.க. – குடுமி பிடிச் சண்டையில் முதலமைச்சர்களை மாற்றிக் கொண்டே இருக்கிறது. இப்போது முதல்வராக வந்திருப்பவர் ஜெகதீஷ் ஷட்டர். இவர் கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகர் என்று ஒரு ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. அந்த 'இந்துத்துவ நாத்திகர்' ஆட்சி, தமது மாநிலத்தில் நிலவும் வறட்சியைப் போக்க மாநிலம் முழுதும் உள்ள 34,000 கோயில்களிலும் 'வருண ஜெபம்' நடத்த உத்தரவு போட்டுள்ளது. பார்ப்பனர்களைக் கொண்டு பூஜைகளையும், ஹோமங்களையும் நடத்தப் போகிறதாம். இதற்காக அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ.17 கோடி. வறட்சி நிவாரணத்துக்காக நிதி கேட்டு மத்திய அரசு கதவுகளைத் தட்டிக் கொண்டே 17 கோடியை வீண்விரயமாக்குகிறது பா.ஜ.க. ஆட்சி. அரசின் இந்த நடவடிக்கையை சட்டமன்றத்தில் ஜனதா தளம் (எஸ்) கட்சியைச் சார்ந்த சி.எஸ்.புட்டே கவுடா, மகாதேவ பிரசாத் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஆனால், துறை அமைச்சராக உள்ள கோட்டா சீனிவாஸ் பூசாரி என்பவர், "நான கடவுளை நம்புகிறேன். வருண பகவானை வேண்டினால் மழை வரும். இந்த முடிவை அரசு திரும்பப் பெறாது" என்று கூறியுள்ளார். 'மனுதர்ம'ம்தான் பா.ஜ.க வழியாக ஆட்சி நடத்துகிறது!*

# ‘மனுதர்ம’த்தில் மண்டியிட்ட மானமற்ற தமிழ் மன்னர்கள்

*தமிழ் மன்னர்கள் நடத்தியது மனுதர்ம அடிப்படையிலான பார்ப்பன ஆட்சியே என்பதையும் மனு சாஸ்திரம் எரிக்கப்படவேண்டும் என்றும் மறைந்த பெரியாரியலாளர் வழக்கறிஞர் கரூர் பூ.அர.குப்புசாமி எழுதிய கட்டுரையை இன்றைய பொருத்தம் கருதி வெளியிடுகிறோம். அவர் 1985 இல் வெளியிட்ட ‘மன்னர்களும் மனுதர்மம்’ நூலில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.*

நம் அப்பாவி மக்கள் ஏதோ மறைந்துபோன ஒரு நூலை - மனுதர்மத்தை - ஏன் இப்போது கொளுத்த வேண்டும் என்பதாக நினைக்கக்கூடும்.

ஆனால், இன்றைய சமூக அமைப்பு, நடைமுறைகள், நம்பிக்கைகள், நல்லது கெட்டது பற்றிய உணர்வு, ஏன் ஊர் அமைப்புக்கூட தர்மசாத்திரங்கள் என்று சொல்லப்பட்ட பார்ப்பனிய ஏற்பாடுகளின் படி நாடாண்ட மன்னர்கள் பல நூற்றாண்டு காலமாக சமூகத்தின் மீது பலாத்காரமாகத் திணித்து நிலைநாட்டியவை என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். நிலைநாட்டிவிட்ட பிறகு அவை இன்று இயல்பாகத் தோன்றுகின்றன - அவ்வளவு தான்.


சாமான்ய மக்கள்கூட ‘மனுநீதி தவறாத ஆட்சி’ என்ற சொற்றொடரைத் தங்கள் பேச்சில் பயன்படுத்துவதைக் காணலாம்.

மனுநீதிச் சோழன் கதை இக்கருத்தைப் பிரபலப்படுத்தவே பரப்பப்பட்டு வந்தது.

நாம் விடை காண வேண்டிய விசயங்கள் ஏராளம்.

- இந்த நாட்டில் மட்டும் பிறப்பால் ஏற்றத் தாழ்வு ஏன்?
- இங்கு மட்டும் தீண்டாமை ஏன்?
- உடன்கட்டை ஏன்?
- நால்வருணம் ஏன்? அதற்குச் சட்ட சம்மதம் ஏன்?
- இன்று வரை (பகிரங்கமாக) இரத்தக் கலப்பு ஏற்பட மறுக்கும் சமூக அமைப்பு எப்படி வந்தது?
- சட்டப்படியான இந்துமதத் தலைவர்களான சங்கராச்சாரிகள் “தீண்டாமை என் பிறப்புரிமை” எனவும், “வருணாசிரம தருமத்தைக் காப்போம்” எனவும் சட்டவிரோதமாகவே பேசி வரவும், செயல் படவும் உரிமை எப்படி வந்தது? அவர்களின் தரிசனத்துக்கு; மாநில, மத்திய அமைச்சர்கள் பிரதானிகள் நத்திக்கிடக்க வேண்டிய அளவு ஆதிக்கம் அவர்களுக்கு எப்படித் தொடர்கிறது?
- கத்மாண்டுவில் (நேபாளம்) மத மாநாடு கூட்டி “இந்து மதத்தின் உயிர்க் கொள்கைகளான ‘கர்மம்’, ‘கர்ம பலன்’, ‘மறு பிறப்பு’ ஆகியவைகளைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய தீர்மானம் போடும் திமிர்த் தண்டத் தன்மை இன்னும் எப்படித் தொடர்கிறது?
- நாத்திகப் பிரச்சாரம் சட்ட சம்பந்தம் இல்லாமல் இருப்பதேன்?
- மூடத்தனத்தின் மொத்தக் குத்தகைதாரர்களான சுவாமிகள், புட்டபர்த்திகள், மகேஷ் யோகிகள் மலியக் காரணம் என்ன?
- தேசியத் தலைவர்கள் எல்லாம், சோசியக் கும்பலின் சொல் கேட்டு ஆட்சி நடத்தும் அவலம் ஏன்?
- இந்திய அல்லது தமிழ்ச் சமுதாயம் ஒரு தேசிய சமூகமாக மலராமல் சாதிகளாகப் பிரிந்து சிதறுண்டு தவிக்கும் தன்மை ஏன்?
- கோடிக்கணக்கான மக்கள் தங்களை வாட்டும் வறுமையை இயல்பாக ஏற்றுக் கொண்டிருக்கும் இயற்கை விரோத மனநிலை ஏன்?
- தங்களைச் சுரண்டிக் கொழுக்கும் கொடியோர்களையே வணங்கும் அப்பாவித்தனம் மக்களிடையே நிலவக் காரணம் என்ன?
- மக்கள் தங்களை ஏய்ப்போருக்கே ஏவல் செய்யும் இளிச்சவாய்த்தனம் எப்படி வந்தது?
- வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகும் வெற்றுச் சடங்குகளாக கோடானுகோடி மக்கள் வதியக் காரணம் என்ன?
- கஞ்சி குடிப்பதற்கிலார் - அம்மக்கள் அதன் காரணங்கள் எவை எனும் அறிவுமிலாச் சென்மங்களாகக் காலங் கழிக்கும் நிலை ஏன்?

இவற்றிற்கும் இவை போன்ற எண்ணிறந்த கேள்விகளுக்கும் விடை காண்பது ஒன்றும் சிரமம் இல்லை. கொஞ்சம் முயற்சித்து நம் வரலாறுகளை, நம் இலக்கியங்களை, வேதங்களுக்கு நியாயம் கற்பிக்கும் தத்துவங்களை, சமுதாய நடைமுறைகளை, பழமொழிகளை அன்றாட வாழ்வில் நடக்கும் சடங்கு சம்பிரதாயங்களை… ‘இதைச் செய்; அதைச் செய்யாதே!’ எனப் பெரியவர்கள் இடும் கட்டளைகளை எல்லாம் சற்று உற்று நோக்கி ஆய்ந்து அறிந்தால் அனைவருக்கும் விடை கிடைக்கும்.



இன்றுள்ள சமூக அமைப்பு திடீரென ஏற்பட்டதல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பூணூல் பூசாரிக் கூட்டமும், புவியாண்ட மன்னர்களும் கூட்டுச் சேர்ந்து செய்து, எதிர்ப்பாளர்களை எல்லாம் வெட்டிச் சாய்த்து சமூகத்தின் மீது திணித்து நடைமுறையாக்கிவிட்ட ஒன்று ஆகும்.

நம் மூளைக்குள் உள்ள எண்ணங்கள், இயல்புகள் எல்லாம் பல நூறு தலைமுறைகளாக உள்ளே ஏற்றப்பட்டவை ஆகும்.

அத்தகு திட்டமிட்ட சதி முயற்சியின் பலனையே இன்று நாம் அனுபவிக்கிறோம். எனவே திட்டமிட்டு முயற்சிக்காமல் அவைகளை மாற்ற முடியாது.

பால்வினை நோயுள்ள பெற்றோர்களின் குழந்தைகள் பலவித நோய்களுக்கும், அவதிகளுக்கும் ஆளாவதுபோல், இன்றைய சமூகம் நேற்றைய சமுதாய தலைவர்களின் குற்றங்களின் பலனை அனுபவிக்கிறது.

நம் மன்னாதி மன்னன் எவனுக்கும் சட்டம் செய்யும் உரிமை இருந்ததில்லை. இது இந்திய அரசியல் கொள்கை. அவன் தர்ம சாஸ்திரங்களின் கட்டளைகளை சமூகத்தில் நிறைவேற்றும் ஒரு கருவி மட்டுமே. அண்ணா ‘சிவாஜி கண்ட இந்துராச்சியம்’ எப்படிப்பட்டதென்பதை விளக்கினார். ‘இந்து ராச்சியத்தில்’ எல்லா மன்னர்களும் சிவாஜிகளே! இதற்குப் பொது விதிக்குத் தமிழ் மன்னர்கள் மட்டும் விதிவிலக்கல்ல!

சங்கம் மருவிய காலத்தில் தமிழ் மக்கள் வைதீக மத நாகம் தீண்டாத நிலையில் இருந்தனர். மன்னர்கள் ஓரிருவர் மட்டும் ஆரியப் பார்ப்பனர் வலையில் விழுந்து வந்தனர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிகளும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிகளும் பெருகத் தொடங்கினர். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியர்கள் அருகத் தொடங்கினர். ‘அறவிலை வணிகன் ஆய் அலன்’ என மார்தட்டிய ‘ஆய்’ போன்ற குறுநில மன்னர்கள் குறைந்து வந்தனர். சேரமான் பெருமாள் நாயனார்கள் பெருகினார்கள். மெல்ல மெல்ல இம்மன்னர்கள் துணையோடு புரோகிதக் கூட்டம் மக்களின் அன்றாட வாழ்வின் நடைமுறைகளை மதம் சார்ந்ததாக மாற்றுவதில் வெற்றிப்பெற்று வந்தனர். எதிர்ப்புகள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டன. குரூரமான கழுவேற்றம் அன்றாட நிகழ்ச்சியாகியது. மாற்றுக் கருத்தினர் நூல்கள் நீரிலும் நெருப்பிலும் இடப்பட்டு அழிக்கப்பட்டன. மெல்லத் தமிழ்ச் சமுதாயம் ஆரிய மத கருத்துக்கள்பால் ஆட்கொள்ளப்பட்டு விட்டது.

இவ்வளவுக்கும் மத்தியில் கருரைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டை ஆண்டுவந்த இரும்பொறை மன்னர் வம்சத்தார் மட்டும் சமணத்தை ஆதரித்து வந்த அரிய காட்சியை கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரை பார்க்கிறோம்.

பின்னர், தமிழகத்தை ஆண்ட மாமன்னர் முதல் குறுநில அதிபர் வரை அனைவருக்கும் இடையே மனு தர்மத்தை மக்கள் மத்தியில் நிலைநாட்டுவதிலே ஒருவித வெறித்தனமான போட்டியே இடைவிடாமல் இருந்து வந்திருக்கிறது. அவர்களின் செப்பேடுகளும் மெய்க்கீர்த்திகளும் இந்தச் செய்தியை விரித்துரைக்கின்றன.

- *மாரவர்மன் சுந்தரபாண்டியன் ‘மனுநெறி தலைப்ப மணிமுடி சூடி’ ஆள்கிறான் என அவன் மெய்க்கீர்த்தி பறைசாற்றுகிறது. (பதிவு செய்யப்பட்ட ஆவணம்) மேலும்,*

*“நால்வகை வேதமும் நவின்றுடன் வளர*
*அவ்வகை வேள்வியும் செய்வினை இயற்ற*
*அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ” -*

ஆண்டிருக்கிறான் அவன்; விட்டானா அதோடு?

*சமயமும் நீதியும் தருமமும் தழைக்க…*
*கடவுள் வேதியர் அருந்தொழில் வேள்விச்*
*செங்கனல் வளர்ப்ப!….*

தன் ஆட்சியை நடத்தி இருக்கிறான்.

- குலசேகரப் பாண்டியனோ, “முத்தமிழும் மனு நூலும் நான்மறை முழுதும் எத்தவச் சமயமும் இனிதுடன் விளங்க” இறைமாட்சி நடத்தி இருக்கிறான்.
- சோழர்கள் என்ன பாண்டியர்களுக்கு இளைத்தவர்களா?

*“ஒப்பரிய மறைநூலும் உரை திறம்பா மனுநூலும்*
*செப்பரிய வடகலையும் தென்கலையும்*
*தலையெடுப்ப*
*நீதிதரு குலநான்கும் நிலைநான்கும் நிலைநிற்ப*
*ஆதியுகம் குடிபுகுத அறு சமயம் தழைத்தோங்க”*

மூன்றாம் இராசராச சோழன் ஆட்சி நடத்தியிருக்கிறான்.

- முதலாம் இராசாதிராசன் “விளங்கு மனுநெறி அசுவமேதஞ் செய்து” பரிபாலனஞ் செய்திருக்கிறான். இராச மகேந்திர சோழனோ, “தருமநெறி நிற்ப மனுநெறி நடாத்திய” மன்னனாகத் தன்னை மார்த்தட்டி அறிவித்துக் கொள்கிறான்.

முதலாம் குலோத்துங்கன் ‘மனுவாறு பெருக’ மக்களை ஆள்வதாக மகிழ்ச்சியோடு அறிவிக்கிறான். விக்கிரமச் சோழனோ “மனுநெறி வளர்த்து” நாடாள்வதாக நாப்பறை அடிக்கிறான். இரண்டாம் குலோத்துங்கனோ ‘மனுவாறு விளங்க’ செங்கோல் செலுத்துவதாகச் செம்மாந்து கூறுகிறான். இரண்டாம் இராசராசன் “மனுவாணை தனி நடாத்தி” மக்களைப் புரந்ததாகப் பெருமை கொள்கிறான். இரண்டாம் இராசாதிராசன் “அமைவில்லா மனுவொருக்க ஆதியம் பாடி நிலைநிற்க” அகிலத்தை ஆண்டதாக அறைந்து கூறுகிறான். மூன்றாம் குலோத்துங்கன் “மனுவின் நெறி தழைத்தோங்க”, “செயல் வாய்ந்த மனு நூலும்” - பெருக கோலோச்சினான் என அவன் மெய்க்கீர்த்தி விளக்குகிறது. மூன்றாம் இராசராசன் “பொருவில் மனுநெறி வாழ பொன் மகுடம் கவித்தருளி” புரோகிதக் கூட்டத்திற்கு பொழுதளந்து சேவை செய்திருக்கிறான்.

இப்படி ஆயிரமாயிரம் அரசாணைக் கல்வெட்டுக்களை நாடெங்கும் பார்க்கக் காணலாம்.

‘இதில் அரசியல்’ பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும் என அந்த மன்னாதி மன்னர்களை மருள வைத்திருக்கிறார்கள் சனாதினிகள் (பழமைவாதிகள்).

வேதபுரியினர் இட்ட கட்டளைப்படி அவரவர்க்கு ஒரு குலத்தொழில் விதித்து அதை மீறுவோர்க்கு கொடும் தண்டனையும் வழங்கி உள்ளார்கள். சாதி ஆச்சாரத்தை நிலைநிறுத்தும் பொறுப்பை பிரமதேய (அக்கிரகார) சதுர்வேதி மங்களங்களின் ஊர்ச் சபைகளே ஏற்றிருந்தன. பார்ப்பனர் அக்ரகாரத்தில் தனித்து வாழ்வதை அரசர்கள் பெருமையோடு காத்து வந்தனர். அவர்களுக்கு மானியங்களாக இறையிலி நிலங்கள்; பாரத விருத்தி, பட்ட விருத்தி, வேத விருத்தி, புராண விருத்தி, தேவதாயம் - இப்படி எத்தனையோ பெயர்களில் அவர்களுக்கு நாட்டிலுள்ள நல்ல நிலங்களை எல்லாம் தாரை வார்த்தார்கள்.

இடையில் வந்த ‘களப்பிரர்கள்’ அந்த நிலங்களை பிடுங்கி உழவர்க்கு கொடுத்தனர். ஆனால், அவர்களை ஒழித்துக் கட்டி மீண்டும் வந்த மனுநீதி தவறா தமிழ் மன்னர்கள் திரும்பவும் உழவர்களிடமிருந்த நிலங்களைப் பார்ப்பனரிடமே சேர்த்து விட்டனர் என்பதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

கிராம சபையாரும் அரசு அதிகாரிகளும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்க நேரும்போது எழும் அய்யப்பாடுகளை சாத்திரங்களின் வல்லுனரான பட்டர் பெருமக்களிடம் கேட்டுத் தெளிந்து அவர்களின் கருத்திற்கேற்பவே தீர்ப்பு வழங்கி வந்தனர்.

**(தொடரும்)**


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தமிழக அரசின் பாராட்டத்தக்க ஆணை

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அனைத்து சுயநிதி கல்லூரிகளிலும் ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்கு 100 சதவீத கட்டணத்தை தமிழக அரசே செலுத்தும் என்ற பாராட்டத்தக்க ஆணையை தமிழக அரசு அறிவித்துள்ளது. தலித் பழங்குடி மாணவர்கள் நலன் கருதி அரசு ஆணையை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இங்கே வெளியிடுகிறது.



## பொள்ளாச்சியில் கராத்தே போட்டி: இலங்கை வீரர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

பொள்ளாச்சி கராத்தே கழகம் அகில இந்திய அளவிலான கராத்தே போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்தப் போட்டி பொள்ளாச்சியில் பல்லடம் ரோடிலுள்ள திருமண மண்டபத்தில் தொடங்கியது. போட்டியில் பங்கேற்பதற்காக பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கராத்தே வீரர்கள் வந்தனர்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள இலங்கையைச் சேர்ந்த 2 கராத்தே வீரர்கள், பயிற்சியாளர்கள் அழைக்கப்பட்டு இருந்தனர். இதை அறிந்த பொள்ளாச்சி நகர பெரியார் திராவிடர் கழகத்தினர் மற்றும் ம.தி.மு.க.வினர் கராத்தே போட்டி நடத்தும் நிர்வாகிகளிடம் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். எக்காரணம் கொண்டும் இலங்கை வீரர்கள் இங்கு வரக்கூடாது. எங்கள் எதிர்ப்பையும் மீறி அவர்கள் பொள்ளாச்சி வந்தால் மீண்டும் இலங்கை செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று எச்சரித்தனர்.

இந்த நிலையில் இலங்கையைச் சேர்ந்த கராத்தே வீரர்கள் சென்னை விமான நிலையம் வந்து சேர்ந்தனர். அவர்களிடம் விமான நிலைய அதிகாரிகள், 'நீங்கள் பொள்ளாச்சி சென்று கராத்தே போட்டியில் பங்கேற்கக் கடும் எதிர்ப்புள்ளது. எனவே இங்கிருந்து திரும்பி விடுங்கள்' என்றனர். அதன் பேரில் அவர்கள் இலங்கைக்கு திரும்பிச் சென்றனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட் கட்சியில் பொறுப்பாளராக வேலை செய்தவர். தோழர் பழனியின் நேர்மையான எதற்கும் அஞ்சாத உறுதியான செயல்பாடுகளை தளி இராமச்சந்திரனே நன்கு அறிவார். பிறகு பொதுவுடைமை கட்சியிலிருந்து விலகி, தமிழ்நாடு விடுதலைப் படைக்கு ஆதரவாளராக இருந்து அந்த அமைப்பு முடக்கப்பட்ட நிலையில் பல ஆண்டுகாலம் ஒதுங்கி நின்று, பிறகு இரண்டு ஆண்டுகாலத்திற்கு முன் பெரியார் திராவிடர் கழகத்தின் சாதி ஒழிப்புப் பணிகளால் ஈர்க்கப்பட்டு, பெரியாரியத்தை ஏற்று, பெரியார் திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். ஏராளமான இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்தார்.

தோழர் பழனி முயற்சியால் பெரியார் திராவிடர் கழகத்தில் இளைஞர்கள் சேர்ந்தது; திருச்சியில் கழகம் நடத்திய தீண்டாமை சுவர் இடிப்பு போராட்டம்; இடிந்தகரையில் நடந்த அணுஉலை எதிர்ப்பு மாநாட்டில் பங்கேற்றது; நாகமங்கலம் ஊராட்சித் தலைவர் தேர்தலில் எம்.எல்.ஏ. நிறுத்திய பெண் வேட்பாளரை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தியது; போன்றவற்றால் கழகத்தின் மீது ஆத்திரமடைந்து உள்ளூர் கழகத் தோழர்களை வீடு புகுந்தும், மருத்துவமனை புகுந்தும் தாக்கிய செய்திகள் கடந்த இதழில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**– நமது செய்தியாளர்**

# பள்ளிக் குழந்தைகள் முடியை வெட்டும் மனுதர்ம வெறி

சூத்திரனுக்குகல்வியைத் தரக் கூடாது என்று மனுதர்மம் கூறுவதற்கு எதிராக வந்ததுதான் கட்டாயக் கல்வி சட்டம் என்று திருப்பூரில் நடந்த சாதி ஒழிப்பு நிறைவுப் பொதுக் கூட்டத்தில் கழகம் தீர்மானம் நிறைவேற்றியது. 6 வயது முதல் 14 வயது வரை அனைவருக்கும் கல்வியை கட்டாயமாக்கும் இந்தச் சட்டம், தனியார் பள்ளிகள் 25 சதவீதம் ஏழைக் குழந்தைகளை கட்டணமின்றி அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. தனியார் கல்வி நிறுவனங்கள் இந்தப் பிரிவைக் கடுமையாக எதிர்க்கின்றன. பெங்களூரிலிருந்து வந்துள்ள ஒரு செய்தி அதிர்ச்சி யளிக்கிறது.

பெங்களூரில், 'நந்தினி லே அவுட்' பகுதியிலுள்ள ஆக்ஸ்போர்டு ஆங்கிலப் பள்ளியில் 25 சதவீத ஒதுக்கீட்டின் கீழ் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்ட இந்த ஏழைக் குழந்தைகள், மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட, அவர்களின் தலைமுடியை வெட்டியுள்ளனர். வகுப்பறையிலும் அவர்களுக்கு கடைசி இடத்தில்தான் இடம். அவர்கள் கொண்டு வரப்படுகிற உணவு டப்பாக்கள், பள்ளி நுழைவு வாயிலில் சோதனையிடப்படுகின்றன. பள்ளி வருகைப் பதிவேட்டிலேயே இவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை. கட்டணம் செலுத்திப் படிக்காத ஏழை ஒடுக்கப்பட்ட குழந்தைகள் தானே அவர்கள் எப்படிப் போனால் என்ன என்ற பார்ப்பனிய சிந்தனையே இதற்குக் காரணம்.

இது ஏதோ, இந்த ஒரு பள்ளியில் மட்டுமல்ல; பெரும்பாலான தனியார் பள்ளிகளில் இதுதான் நிலை. தங்கள் பள்ளிகளில் படிக்க வரும் வசதிப் படைத்த உயர்குடிப் பிறப்புக் குழந்தைகளோடு இந்த எழை ஒடுக்கப்பட்ட குழந்தைகளும் எப்படி ஒன்றாக படிப்பது? அது சமுதாயத் தகுதிக்கும், கல்வித் தகுதிக்கும் உகந்தது தானா? என்ற மனு தர்மப் பார்வைதான் இதற்கான அடிப்படைக் காரணம். 'தலித் சம்ராஜ்ய ஸ்தாவன சமிதி' என்ற தலித் அமைப்பு, இந்த 'மனுவெறி' நடவடிக்கையை வெளிக்கொண்டு வந்துள்ளது. இந்த 25 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து தனியார் பள்ளிகள் உச்சநீதிமன்றம் வரை போய் எதிர்த்து தோல்வியே கண்டார்கள்.

இந்தக் குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை அரசே மான்யமாக வழங்க முன் வந்துள்ளபோதும், சேரிக் குழந்தைகளும், ஏழைக் குழந்தைகளும், அடுக்குமாடி அக்கிரகாரக் குழந்தைகளுடன் எப்படி சமமாக ஒரே வகுப்பில் படிக்க முடியும் என்ற மனுதர்ம சிந்தனையே 2012 இல் அரசு சட்டத்தை மீறியும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை புறந் தள்ளியும் பொதுப் புத்தியில் பதிய வைக்கப்பட்டிருக்கிறது. இந்த 'மனுதர்ம' சிந்தனைப் போக்கை மாற்றியமைக்க வேண்டுமா? வேண்டாமா?



## தோழர் பழனிக்கு திருச்சியில் வீர வணக்கம்

சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட கிருட்டிணகிரி மாவட்ட பெரியார் தி.க. அமைப்பாளர் பழனிச்சாமிக்கு வீர வணக்க நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி கலைஞர் அறிவாலயத்திலிருந்து அண்ணா சிலை வரை வீரவணக்க ஊர்வலம் 14.7.2012 சனி மாலை 5 மணிக்கு மாவட்ட தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமையிலும் திருவரங்க நகர செயலாளர் அசோக் முன்னிலையிலும் நடைபெற்றது.

மா.பெ.பொ.கட்சி மாவட்ட செயலாளர் கலியபெருமாள், ஆதித் தமிழர் பேரவை உறந்தை ரமணா, பெரியார் பாசறை அமைப்பாளர் அன்பழகன், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் தமிழாதன், சட்ட எரிப்புப் போராளி முத்துச் செழியன் (பெ.தி.க.), பெரியார் திராவிடர் கழக மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கியசாமி மற்றும் அகில இந்திய இளைஞர் இயக்கம் டார்வின் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கழக மாவட்ட இணை செயலாளர் த. புதியவன் மற்றும் குணா ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழக மாவட்ட பொருளாளர் மு.மனோகரன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மாவட்ட செயலாளர் வே.கந்தவேல் குமார் நன்றியுரையாற்றினார்.

## இளம் விஞ்ஞானியின் நன்கொடை

தூத்துக்குடியில் பிறந்து, அமெரிக்காவில் உயர் கல்வியும் முனைவர் பட்டமும் பெற்ற இளம் விஞ்ஞானி தோழர் இராசா, பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளையும், பெரியார் முழக்கம் ஏட்டையும் இணைய தளங்கள் வழியாக படித்து மகிழ்ந்து ஜூலை 6 ஆம் தேதி கழகத் தலைமை அலுவலகம் தேடி வந்தார். தற்போது தமிழகம் வந்து, முகப்பேர் மேற்கு பகுதியில் தங்கியுள்ள தோழர் இராசா, தம்முடைய உயர்கல்வி பெறும் நிலை உயர்வுக்குக் காரணமான பெரியார் தொண்டினை நன்றியுடன் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் நினைவு கூர்ந்தார். விரைவில் சாதி மறுப்பு திருமணத்தை எளிமையாக பதிவு செய்ய விருப்பதையும் தெரிவித்தார். தான் பொருளாதார நிலையில் இன்னும் வளரவில்லை. ஆனாலும் இந்த கழகத்துக்கு ஏதாவது செய்ய விரும்புகிறேன் என்று கூறி, ரூ.1000 நன்கொடையை பொதுச் செயலாளரிடம் வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 26th July 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.